# பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாதகால வழிகாட்டல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வழங்குபவர்

**அஜித் நிவாட் கப்ரால்**
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

01 ஒத்தோபர் 2021

***“ஆசியாவின் அதிசயம்”***

மற்றும்

***“ஆசியாவின் அடுத்த அற்புதம்”***

என லாவண்யமாக குறிப்பிடப்பட்ட இலங்கையானது,

கடந்த சில ஆண்டுகளாக கடுமையான சவால்களுக்கு உள்ளாகியுள்ளது…



# தற்போதைய பொருளாதாரச் சவால்கள் பற்றிய அச்சம் காணப்படுகின்றது...

மந்தமான வளர்ச்சி மற்றும் போராடுகின்ற வியபாரங்கள்

கொவிட்-19 முடக்கலின் கடுமையான தாக்கம்

வெளிநாட்டுச் செலாவணியின் பற்றாக்குறை மற்றும் இலங்கை ரூபாவின் கடுமையான தேய்மானம் பற்றிய அச்சங்கள்

செயற்படாக் கடன்களின் சாத்தியமான அதிகரிப்பு



படுகடன் உறுதிப்பாடு, குறிப்பாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பாரிய வெளிநின்ற பெறுமதிகளைப் பற்றிய கரிசனைகள்

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகளின் அதிகரிப்பு

குறைந்து வருகின்ற அரசிறைகள்

அலுவல்சார் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கங்களின் குறைந்த மட்டங்கள்

பாதகமான நாட்டிற்கான தரமிடல்கள்

கரிசனைக்குள்ளான நுகர்வோர்கள்

அதிகாரமளிக்கப்படாத பணவனுப்பல் பாய்ச்சல்களின் அதிகரிப்பு

இறக்குமதியாளர்களால் இருப்பில் வைக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்கள்

ஆபத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்

ஏற்றுமதியாளர்களால் இருப்பில் வைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி

இணக்கமற்ற பன்னாட்டு மற்றும் உள்ளூர் ஊடக அறிக்கைகள்

நம்பகத்தன்மையின் குறைவடைவு

# எதிர்த்தரப்பினர் மற்றும் ஏனைய ஆர்வம்மிக்க குழுக்களினதும் கிரமமான விரும்பத்தகாத அறிக்கைகளும் எதிர்மறையான உணர்வுகளுக்கு பங்களித்துள்ளன…

**නව මූල්‍ය උපායක් රටට අවශ්‍යයි**

MP notes a hidden aspect of Sri Lanka's debt

5 August 2021 12:01 am · 0 · 1302

"ජනපති ප්‍රයත්නය ලත් තැන ම ලොප් වෙලා"

**රසායනික පොහොරවලින් ඉවත් වීම**
**එක්වරම ක්‍රියාත්මක කළොත්**
**ගොවීන් ගොවිතැනින් ඈත් වේවි**

Current lockdown imposed by Govt. is a failure - Opposition Leader

28 Aug 2021 · 387

- Those who have succumbed to COVID in SL has become twice as many as those who have died of the pandemic in China
- Ministers are putting the lives of people in this country on auction

Home | Economy & Markets | Industry | Opinion | Politics | Other | Events | LBO T

"Be careful of pump and dump in stock market"

"This govt. printed Rs. 880 billions"

13 Jul 2021 · 6611

This is the roadmap of Zimbabwe

- **Economy a step closer to bankruptcy**

Change the doctor rather than changing the medication to resolve country's problems




*Projects such as Nelum Kuluna and Hambantota Conference Hall do not directly benefit the people or the country; implementing such projects making use of loans is not an appropriate decision*

# அதே நேரத்தில், கடந்த சில ஆண்டுகளாக பொருளாதாரமானது சிறிதளவான சாதகமான முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளதென்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்...

| | 2005 | 2014 | 2019 | 2020 |
|---|---|---|---|---|
| நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி (ஐ.அ.டொ.மில்) | 24,406 | 79,359 | 83,976 | 80,707 |
| நடைமுறை சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி (ஐ.அ.டொலர்) | 1,242 | 3,819 | 3,852 | 3,682 |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ.மில்) | 6,347 | 11,130 | 11,940 | 10,047 |
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 26.0 | 14.0 | 14.2 | 12.4 |
| பணிகள் ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ.மில்) | 1,539 | 5,605 | 7,474 | 3,035 |
| பணிகள் ஏற்றுமதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 6.3 | 7.1 | 8.9 | 3.8 |
| வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | (2.7) | (2.5) | (2.2) | (1.3) |
| திரண்ட இறை மீதி (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | (7.0) | (5.7) | (9.6) | (11.1) |
| மத்திய அரச படுகடன் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 90.8 | 72.3 | 86.8 | 101.0 |
| மத்திய அரச வெளிநாட்டு படுகடன் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 39.0 | 30.0 | 41.3 | 40.4 |
| வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | - | 6.3 | 17.9 | 17.4 |
| சராசரி செலாவணி வீதம் (ரூ./ஐ.அ.டொலர்) | 100.50 | 130.56 | 178.78 | 185.52 |
| ஆண்டிறுதிச் செலாவணி வீதம் (ரூ./ஐ.அ.டொலர்) | 102.12 | 131.05 | 181.63 | 186.41 |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஐ.அ.டொ.மில்) | 2,735.0 | 8,208.4 | 7,642.4 | 5,664.3 |
| பணவீக்கம் (கொ.நு.வி.சு மாற்றம்) | 11.0 | 3.3 | 4.3 | 4.6 |
| அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985=100) | 1,922.2 | 7,299.0 | 6,129.2 | 6,774.2 |
| பங்குச் சந்தை மூலதனவாக்கம்(ஐ.அ.டொலர்.பில்) | 5.7 | 23.7 | 15.7 | 15.9 |


# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்துடன் கூடிய பொருளாதாரத்தின் நலிவடைதலானது, இலங்கையின் பேரண்ட பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிலைத்திருத்தல் பற்றிய கவலையை ஏற்படுத்தியுள்ளது…




*மூலங்கள்: பல்வேறுபட்ட ஊடக அறிக்கைகள்*


# 2021இன் முதலாம் அரையாண்டில் பொருளாதாரம் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ள போதிலும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொழிலாளர் சந்தைப் பெறுபேறுகளில் இடையூறுகள் அவதானிக்கப்பட்டுள்ளன...

## வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)





*Source*: Department of Census and Statistics

## காலாண்டு உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான பங்களிப்பு (ஆண்டுக்காண்டு)





*Source*: Department of Census and Statistics

## சக பொருளாதாரங்களின் மீண்டெழும் தன்மை (2020Q2 Vs. 2021Q2)




*Source* : Department of Census and Statistics


## தொழிலின்மை




*Source* : Department of Census and Statistics


# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான விளைவுகளின் மத்தியில் வெளிநாட்டுத் துறையானது முன்னெப்பொழுதுமில்லாத சவால்களை எதிர்நோக்கியுள்ளது…

### ஏற்றுமதிகளை விட இறக்குமதிகள் உயர்ந்த மட்டத்தில் அதிகரித்து வர்த்தக கணக்கின் கணிசமானதொரு பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது…





(a) August 2021 export and import data are preliminary unadjusted data from Sri Lanka Customs.


### உதிர்த்த ஞாயிறு தாக்குதல் முதல் சுற்றலாவிலிருந்தான வருவாய்கள் வெகுவாக குறைவடைந்துள்ளன…




### தொடர்ச்சியான பாரியளவான படுகடன் பணிக் கொடுப்பனவுகளுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைகின்றன…





### பல்வகையான சவால்கள் இருந்த போதிலும், நாட்டின் படுகடன் கடப்பாடுகளை இலங்கை தொடர்ச்சியாக மீளச்செலுத்துகின்றது…




# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியில் மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பு மற்றும் நலிவடைந்த அரசிறையின் காரணமாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை பெயரளவு நியதிகளில் அதிகரித்தது…


## அரசிறை





## முக்கிய இறை நிலுவைகள்




## அரச செலவினம்





## மத்திய அரச படுகடன்




# பணவீக்கம் பரந்தளவில் மட்டுப்படுத்தப்பட்ட போதிலும், பணம் மற்றும் கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கமொன்று அவதானிக்கப்பட்டது...


### விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு ($M_{2b}$)





### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற கொடுகடன்




### அரசாங்கத்தின் மீதான தேறிய கோரல்கள் - வருடாந்த அதிகரிப்பு




### முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டுக்காண்டு) – கொ.நு.வி.சு



# அளவிடப்பட்டபோது, அலுவல்சார் பதிலிறுப்புகள் மிகவும் ஈர்க்கப்படும் வகையிலிருந்தபோதும் போதுமான ஒப்புதல் கிடைக்கவில்லை…

## அரசாங்கத்தின் ஆதரவு*

- முன்னேற்பாடான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டங்கள்
- உதவி தேவைப்படுகின்ற குடும்பங்களுக்கான இறை ஊக்குவிப்புக்கள் மற்றும் நிதியியல் உதவிகள்
- நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாட்டு வழிமுறைகள்
- மருத்துவ சாதனங்களிற்கான வரி விலக்கல்கள்
- பீசிஆர் மற்றும் துரித அன்டிஜன் பரிசோதனைகள்
- நலப்பாதுகாப்பு வசதிகளுக்கான ஏற்பாடு
- சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

ரூ.209 பில்

*2020 மற்றும் 2021 செப்தெம்பர் 07 வரையான அரசாங்கத்தின் ஆதரவுகளை உள்ளடக்கியது

## இலங்கை மத்திய வங்கியின் ஆதரவு

| | |
|---|---|
| கொவிட்-19 சௌபாக்யா மீள்நிதியிடல் திட்டம் | ரூ. 165.5 பில் (மொ.உ.உற்பத்தியின் 1.2 சதவீதமாக) |
| அரசாங்கித்திற்கான நிதியியல் ஆதரவு ** | ரூ. 2,002 பில் (மொ.உ.உற்பத்தியின் 13.4 சதவீதமாக) |
| குறைக்கப்பட்ட வட்டிக் கிரயத்தின் வடிவத்தில் தனியார் துறைக்கான சேமிப்பு *** | ரூ. 365 பில் (மொ.உ.உற்பத்தியின் 2.4 சதவீதமாக) |
| அரச துறைக்கான குறைக்கப்பட்ட வட்டி கிரயத்தின் நியதிகளில் சேமிப்பு *** | ரூ. 313 பில் (மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதமாக) |
| நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகள் | நீடிக்கப்பட்ட படுகடன் இசைவுத்தாமதம் **** உரிய காலத்திற்கான மூலதனம் (வங்கி மற்றும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள்) ரூ. 780 பில் |

** 2020 மற்றும் 2021 செத்தெம்பர் 24 வரையான ஆதரவு
*** 2020 மற்றும் 2021 யூலை இறுதிவரையான சேமிப்பு
**** ஒரு கடன்பெறுநர் பல்வேறு திட்டங்கள்/கட்டங்களின் கீழ் சலுகைகளை பெற்றிருக்கக்கூடும்

# உண்மையில், தடுப்பூசி நிகழ்ச்சித்திட்ட முன்னெடுத்தலின் துரிதமான செயற்பாடும் உலகளாவிய பயணத்தடையின் நீக்கலும் சிறந்த சுபீட்சத்திற்கான நம்பகத்தன்மையை வழங்குகின்றது...

- கொவிட்-19 நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையின் துரித வீழ்ச்சியுடன் துரிதமான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம் பலனளிக்க ஆரம்பித்துள்ளது


**இலங்கை:**
(2021 செத் 30இல் உள்ளவாறாக)

20 வயதிற்கு மேற்பட்ட 97.9% குடித்தொகையினர் ஆகக்குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்
20 வயதிற்கு மேற்பட்ட 79.1% குடித்தொகையினருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது
மொத்த குடித்தொகையின் 53.5% குடித்தொகையினருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

**உலகம்:**
(2021 செத் 28இல் உள்ளவாறாக)


44.9% குடித்தொகையினர் ஆகக்குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்
மொத்த குடித்தொகையின் 33.0% குடித்தொகையினருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

**நாளாந்த உறுதிப்படுத்தப்பட்ட கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்கள்**




*Source :* Ministry of Health

**சனத்தொகையில் கொவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் பங்கு (2021 செத்தெம்பர் 28இல் உள்ளவாறாக)**





*Source :* Ourworldindata.org

# கடந்த காலங்களிலும் நாம் கடுமையான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம்...

- 1505இலிருந்து 1948 வரையில் 443 ஆண்டுகளாக வெளிநாட்டு ஆட்சி
- 3 தசாப்த கால உள்நாட்டுப் பிணக்கு மற்றும் இரண்டு கிளர்ச்சிகள்
- காலத்திற்கு காலம் ஏற்பட்ட வலு மற்றும் சக்தி நெருக்கடிகள்
  - மின்வலு தடைகள்
  - எரிபொருள் நெருக்கடிகள் (சுத்திகரிப்பு ஆலைகளை மூடுதல், தரமற்ற எரிபொருள் இறக்குமதிகள்)
- கடுமையான வரட்சிகள், பெரு வெள்ளங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் (சுனாமி உள்ளடங்கலாக)
- உலகளாவிய நோய்த்தொற்று
- உயர்வான சந்தை வட்டி வீதங்களைக் கோரும் 2009இற்கு முந்திய இரட்டை இலக்க பணவீக்க வீதங்கள்
- வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் குறைவடைவு
- வெளிநாட்டுத் துறை ஏற்றதாழ்வுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கட்டுப்பாடுகள்: கீழ்நோக்கி குறைக்கப்பட்ட தரமிடல்கள்
- மொ.உ.உற்பத்தியின் 100 சதவீதத்திற்கு மேலதிகமான படுகடன் மட்டங்களின் நீடித்த காலப்பகுதிகள்

**ஆனால், ஒரே தேசமாக, நாம் எப்பொழுதும் மீண்டெழுந்துள்ளோம்...**

## இப்பின்னணியில், இத்தகைய சவால்களை நீடித்துநிலைபெறத்தக்க வகையில் தீர்ப்பதற்காக அனைத்து பங்குதாரர்களிற்கும் அவர்களிடம் எதிர்பார்க்கும் வகிபாகம் குறித்த தெளிவுபடுத்தலை தற்போது நாம் வழங்கவேண்டும்...



# பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினை வழங்குவதற்கும் முப்பரிமான கட்டமைப்பொன்றை நாம் முன்மொழிகின்றோம்…

#1

- 2021 ஒத்தோபர் 01இலிருந்து 2022 மாச்சு 31 வரையான ஆறு மாத கால வழிகாட்டல்
  - நிதியியல் முறைமை உறுதிப்பாடு மற்றும் இறை உறுதிப்பாடு மீது கவனம் செலுத்தப்பட்ட முயற்சிகள்
  - உரிய நேரத்தில் படுகடன் பணிக்கொடுப்பனவுகளை நிச்சயப்படுத்துவதற்கான அண்மைக்கால வழிமுறைகள்
  - சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையை அதிகரித்தல்
  - அனைத்து தொழில்முயற்சிகளுக்கும் உலகளாவிய நோய்த்தொற்று விளைவிலிருந்து மீட்சியடைவதற்கான கட்டமைப்பை உருவாக்குதல்

#2

- 2022 சனவரி 01இலிருந்து 2022 திசெம்பர் 31 வரையான ஒரு வருட கால எல்லை (2022 சனவரி 01இல் அறிவிக்கப்படும்)
  - படுகடனல்லாத உட்பாய்ச்சல்களை பரீசிலணையில் கொண்டு வெளிநாட்டுப் படுகடன் தோற்றப்பாட்டை மேம்படுத்துதல்
  - இறை மற்றும் வெளிநாட்டு இலக்குகளை வழங்குதல்
  - உண்மைப் பொருளாதாரத்தின் விரைவான மீட்சியை ஊக்குவித்தல்
  - நாட்டிற்கான தரமிடல்களையும் வியாபார இயலுமை குறிகாட்டிகளையும் மேம்படுத்துதல்

#3

- நடுத்தர காலம் முதல் நீண்ட காலம் வரையான எல்லை
  - அதிர்வுகளை ஈர்த்துக்கொள்வதற்காக அனைத்துப் பேரண்டப் பொருளாதார அடிப்படைகளிலும் உறுதியான “பாதுகாப்பை” கட்டுவித்ததல்
  - உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல்
  - தாழ்ந்த பணவீக்கச் சூழலிற்குள் உயர் வளர்ச்சிக்கான பெருமுயற்சி
  - இறை மற்றும் நாணய இலக்குகளை அடைவதை உறுதிப்படுத்தல்

## அண்மைக் கால எல்லையை, அதாவது அடுத்த ஆறு மாத காலத்தினை, நெருக்கமாக கண்காணிப்பதன் மூலம் வெளிநாட்டுத் துறையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி மேற்கொள்ளும்...

- இத்தகைய குறுங்கால கவனம் செலுத்துகைக்கான அடிப்படையானது, வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான சவால் மற்றும் படுகடன் பணிக்கொடுப்பனவின் மீதான கரிசனைகளை கருத்திற்கொண்டு இக்காலத்தில் முன்னெடுக்கப்படும் சரியான முகாமைத்துவம் பொருளாதார மீளெழுச்சியை வழிகோலக்கூடிய தெளிவு மற்றும் நிச்சயத்தன்மையை மீட்டெடுக்கும் என்பதாகும்
- இவ் 6 மாதகால எல்லையின் இறுதியில், வணிகப்பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான நடைமுறை முயற்சிகளும் கணிசமான அடைவுகளைக் காட்டுகின்ற அதேவேளை சுற்றுலாவிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் இயல்பு நிலையை அடையக்கூடும்
- துறைமுக நகரம் மற்றும் கைத்தொழில் வலையத்தை நிறைவேற்றுவதுடன் தொடர்ச்சியான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல் எதிர்பார்க்கப்படுகின்றது

**இலக்குவைக்கப்பட்ட ஆறு மாத கால இறுதியில் இத்தகைய பெறுபெறு வெளிநாட்டுத்துறைக்கு உறுதியான அடித்தளத்தை வழங்கும்**

## ஒவ்வொரு பங்குதாரரின் இன்றியமையாத மிதமான பங்களிப்புகளுடன், வெளிநாட்டுத் துறையின் அனைத்து பங்குதாரர்களின் ஒன்றிணைந்த முயற்சிகளும் இத்தகைய புதுமுயற்சிக்குத் தேவைப்படுகிறது…

- பொருளாதாரத்தை பாரிய உறுதிப்பாட்டிற்கு மாற்றுகின்ற காலப்பகுதியில் படிப்படியாக ஏற்படுகின்ற தேவையான திருத்தங்கங்களுக்கு அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் மூலம் வழங்கப்படுகின்ற கொள்கை வழிகாட்டல் ஆதரவளிக்கும்
- இத்தகைய முயற்சிகள் பன்னாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு தரமிடல் முகவர்களின் உடனடியான நேர்க்கணிய நடவடிக்கைகளையும் தூண்டும். உலகளாவிய மத்திய வங்கிகளின் நடவடிக்கைகளும் முன்னோக்கிய பாதையில் செல்வாக்குச் செலுத்தும்

**எந்தவொரு தனிப்பட்ட துறைக்கும் அதிகமான சுமையிருக்காது, ஆனால் அனைத்தும் பங்களிக்க வேண்டும்**

## முக்கிய பங்குதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற முக்கிய பெறுபேறுகளின் தொகுப்பு:

**அரசாங்கம்:** வியாபாரத்திற்குச் சாதகமான வரவுசெலவுத் திட்டம்; மேம்படுத்தப்பட்ட படுகடனல்லாத உட்பாய்ச்சல்கள்; படுகடன் கலவையை மாற்றும் பொருட்டிலான நிதியங்களைத் திரட்டுவதற்கான தீவிரமான ஆதரவு

**மத்திய வங்கி:** நாணயவிதிச் சட்டத்தில் கோரப்பட்டதற்கமைவாக பேரண்ட பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு; உறுதியான செலாவணி வீதம் மற்றும் வட்டி வீத கட்டமைப்பை நிச்சயப்படுத்தல்

**வங்கித்தொழில் துறை:** உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் பாரிய வெளிப்படைத்தன்மை; வெளிநாட்டிலிருந்தான புதிய நிதி மற்றும் கொடுகடன் வசதிகள்; ஏற்றுமதி நிதிப் பரிமாற்றலினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கியுடன் நெருக்கமாக ஒத்துழைப்பு

**வணிக சேவை ஏற்றுமதியாளர்கள்:** செலாவணி வீதம் மீதான பாதகமான ஊகத்தினை விலக்குதல் மற்றும் உரிய நேரத்தில் ஏற்றுமதி பெறுகைகளை அனுப்புதல் மற்றும் மாற்றுதல்; ஏற்றுமதி வியாபார வளர்ச்சி

**இறக்குமதியாளர்கள்:** அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்தல்

**சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள்:** அத்தியாவசியமான இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு பொருட்களின் பதுக்கலை தவிர்த்தல்; இலாப எல்லைகளை அதிகரிப்பதன் மூலம் இயல்பிற்கதிகமான இலாபங்களை ஈட்டுவதற்கான முயற்சிகளை தவிர்த்தல்

**உலகளாவிய இலங்கையர்கள்:** பணவனுப்பல்கள் மற்றும் படுகடனல்லாத உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பு

# அரசாங்கப் படுகடனைச் சுற்றியுள்ள பல்வேறு முக்கிய பிரச்சனைகளுக்கு சில தெளிவான கொள்கை பதிலிறுப்புக்கள் தேவைப்படக்கூடும்...

உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியில் இறைத் தொழிற்பாடுகள் மீதான கணிசமான அழுத்தங்கள்

கடந்த ஆண்டுகளின் வெளிநாட்டு படுகடன் மீதான திரட்டானது நீடித்துநிலைத்திருத்தல் கரிசணைகளை எழுப்பியுள்ளது


2018 ஏப்றலிலிருந்து 2019 ஜுன் வரையான இடைப்பட்ட காலத்தில் (15 மாதங்கள்) நாட்டிற்கான பன்னாட்டு முறிகளூடாக திரட்டப்பட்ட படுகடன் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனாகும்

சுற்றுலா, முதலீட்டு பாய்ச்சல்கள், ஏனைய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மற்றும் உட்பாய்ச்சல்களில் கொவிட்19 உலகளாவிய நோய்த்தொற்று தாக்கத்தினை ஏற்படுத்தியது

தரமிடல் குறைவடைதல் மற்றும் பாதகமான ஊகம் என்பன மரபுசார் நிதியிடலுக்கான அணுகுதலில் தாக்கத்தினை ஏற்படுத்தின

உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2 பில்லியன் மதிப்பிலான இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான கொடுப்பனவுகளுடன் படுகடன் பணிக்கொடுப்பனவுக்கான இயலுமை மீதான நம்பத்தன்மை மீளச் செயற்படுத்தப்பட்டது


## வெளிநின்ற மத்திய அரசு படுகடன் (ஆண்டிறுதியிலுள்ளவாறு)




படுகடன் மீள்செலுத்தலை விரும்பிய உத்தரவாதத்துடன் சுதந்திரத்திற்கு பின்னரான 70 ஆண்டுகளிற்கு மேலாக நாட்டின் அப்பழுக்கற்ற படுகடன் பணிக்கொடுப்பனவு பதிவுகளை கடன்வழங்குநர்கள் முற்றிலும் அறிவார்கள்

நாட்டிற்கான பன்னாட்டு முறி இரண்டாந்தர சந்தையில் உயர்ந்த விளைவுகள் நிலவுகின்ற போதிலும் குறைவான அளவுகளிலே கிடைக்கின்றன


## இலங்கையின் நாட்டிற்கான தரமிடல்




# வங்கித்தொழில் துறை தாக்குபிடிக்கக்கூடிய தன்மையை கொண்டிருந்தாலும் சில பிரச்சனைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது…

- வெளிநாட்டு நாணய திரவத்தன்மை நிலைமை மீதான அழுத்தங்கள்
- உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கான நீடித்த சட்டரீதியான கடன் இசைவுத்தாமதம் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பின்னர் பொருளாதாரத்தின் கணிசமான மீட்சிக்கான சாத்தியமான குறைபாடுகள்
- உரிமம்பெற்ற வங்கிகளினால் அரசாங்கத்திற்கும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சியாளர்களுக்குமான கொடுகடனின் இருப்பின் அதிகரிப்பு
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தள பாதுகாப்பு உள்ளிட்ட தொழிற்பாட்டு தாக்குபிடித்தல் தன்மைக்கான தோற்றும்பெற்று வரும் அச்சுறுத்தல்கள்


### மூலதனம்





### இலாபத்தன்மை




### திரவத்தன்மை




### சொத்துத் தரம்





| விடயம் | இறுதியில் உள்ளவாறான தொகை (ரூ.றி) | | ஆண்டிற்காண்டு வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் '20 | ஓகத்து '21 | திசெம்பர் '20 | ஓகத்து '21 |
| சொத்துக்கள் | 14.7 | 16.4 | 17.1 | 18.9 |
| கடன்கள் | 9.1 | 10.4 | 11.9 | 18.0 |
| முதலீடுகள் | 4.2 | 4.5 | 21.7 | 23.8 |
| வைப்புக்கள் | 11.1 | 12.5 | 21.6 | 20.6 |
| கடன் பெறுகைகள் | 1.7 | 2.0 | 0.8 | 13.9 |
| மூலதன நிதியங்கள் | 1.3 | 1.4 | 11.0 | 16.2 |

# வங்கியல்லாத் தொழில் துறையும் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்திருந்த பல்வேறு சவால்களை கையாளவேண்டியுள்ளது…


- ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்களானது மெதுவடைந்துள்ளது
- தோல்வியுற்ற நிதிக்கம்பனிகளின் வைப்பாளர்களின் இக்கட்டான நிலைக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது
- தோல்வியுற்ற நிதிக்கம்பனிகளின் சாத்தியமான மீளெழுச்சி தொடர்பில் தீவிரமாக கருத்திற்கொள்ளல் வேண்டும்
- வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றிற்கான சலுகைகளை தொடருவதானது அதிகாரசபைகளின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்
- துறையிலுள்ள அமைப்பியல் ரீதியான மற்றும் வியாபார மாதிரிகளின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு நிறுவப்படல் வேண்டும்

**வங்கியல்லா நிதியியல் நிறுவன துறையின் சொத்துக்கள், கொடுகடன்கள், வைப்புக்கள் மற்றும் கடன் பெறுகைகள்**




Note: Figures for end of Financial Year

**வங்கியல்லா நிதியியல் நிறுவன துறையின் சொத்துக்கள் மீதான வருவாய், பங்குரிமை மீதான வருவாய், மூலதனப் போதுமை விகிதம் மற்றும் செயற்படாக் கடன்கள்**




# ஏற்றுமதியாளர்களைப் பொறுத்தமட்டில், பொருட்களின் பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது எனினும் நிதிப்பாய்ச்சல்கள் போதுமானளவில் இடம்பெறவில்லை...

- ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பாய்ச்சல் மற்றும் நிதிப்பாய்ச்சல்கள் என்பவற்றிற்கிடையில் பரந்தளவான இடைவெளியொன்று காணப்படுகின்றது
- செலாவணி வீத அசைவுகள் மீதான தேவையற்ற ஊகமொன்றின் காரணமாக ஏற்றுமதி வருவாய்களை மாற்றுவதற்கு தயக்கமொன்று காணப்படுகின்றதுடன் இது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணி சந்தைக்கான உட்பாய்ச்சல்களை மட்டுப்படுத்தியுள்ளது
- ஏற்றுமதியாளர்கள் வட்டி வீத வணிக விலை வேற்றுமையினை மூலதனமயமாக்குவதன் மூலமான பெறுகைகள்/வருவாய்களை மாற்றுதல் நடவடிக்கையானது அதன் பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதி துறைக்கு ஆதரவளிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை கட்டுப்படுத்தியுள்ளது

- ஏற்றுமதி நடவடிக்கைகளின் மூலமாக பெறப்படும் வெளிநாட்டுச் செலாவணி நாட்டிற்கு முறையாக திருப்பி அனுப்பப்பட்டு இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுவதை உறுதிசெய்ய வேண்டிய தேவைப்பாடொன்று காணப்படுகின்றது

### மாதாந்த ஏற்றுமதி வருவாய்கள்




**நிதிப்பாய்ச்சல்**


மீளனுப்பப்படும் மாதாந்த சராசரி ஏற்றுமதிப் பெறுகைகள் ஐ.அ.டொலர் 640 மில்லியன் பெறுமதியாகும்

**பொருட்களின் பாய்ச்சல்**

மாதாந்த சராசரி வணிகப்பொருள் ஏற்றுமதிகள் ஐ.அ.டொ.985 மில் பெறுமதியாகும்

பொருட்களின் (ஏற்றுமதிகள்) பாய்ச்சல் மற்றும் நிதிப்பாய்ச்சல் என்பவற்றிற்கிடையிலான மாதாந்த இடைவெளி ஐ.அ.டொ. 345 மில்லியன்

### சனவரி தொடக்கம் ஓகத்து வரையான ஏற்றுமதிகள் (2018-2021) : ஐ.அ.டொ.மில்





குறிப்பு: 2021 ஓகத்து தரவுகள் சீராக்கப்படாதவையும் ஆரம்பமானவையுமாகும்





ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


# இறக்குமதியாளர்கள் மற்றும் இறக்குமதிகள் என்பவற்றைப் பொறுத்தமட்டிலும் சில அழுத்தங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன...

- ஊக இறக்குமதிகள் அதிகரித்து வருகின்றன
- சில இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்ந்து இருந்தபோதிலும், மொத்த எரிபொருள் அல்லாத இறக்குமதி செலவினம் அதிகரித்துள்ளது
- ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றுதல் (பூரணமற்ற திருப்பி அனுப்பலுடன்) மற்றும் இறக்குமதிகள் மீதான செலவினம் என்பவற்றிற்கிடையிலான மாதாந்த சராசரி இடைவெளி கவலையளிக்கக்கூடியதாகவுள்ளது




குறிப்பு: 2021 ஓகத்து தரவுகள் சீராக்கப்படாதவையும் ஆரம்பமானவையுமாகும்


# பணி ஏற்றுமதியாளர்கள் (சுற்றுலாத்துறை தவிர்ந்த) உலகளாவிய நோய்த்தொற்றினால் குறைவாக பாதிக்கப்பட்டுள்ளனர்...

- சுற்றுலாத் துறையின் மீதான உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் இருந்தபோதிலும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் / வெளியிலிருந்தான வியாபார செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற பிற சேவைகளின் ஏற்றுமதியாளர்கள் நோய்த்தொற்றுக்கு பின்னரான காலப்பகுதியில் சிறப்பாக செயற்பட்டுள்ளனர்


- போக்குவரத்துத் துறையும் முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டுகின்றது

- பணிகள் ஏற்றுமதிகளில் “ஏற்றுமதிப் பெறுகைகளை” திருப்பி அனுப்புவதற்கான எவ்விதமான தேவைப்பாடுகளும் தற்போது காணப்படவில்லை


தகவல் தொழில்நுட்பம் - வெளியிலிருந்தான வியாபார செயன்முறைகளைப் பெற்றுக்கொள்ளலுக்கான உட்பாய்ச்சல்கள்




துறைமுகப் பணிகள் - கொள்கலன் கையாளல்





துறைமுகப் பணிகள் - சரக்குக் கையாளல்




# கைத்தொழிலாளர்களும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளனர்...

- கைத்தொழில் துறையில், குறிப்பாக தயாரிப்புத் துறையின், பன்முகப்படுத்தலானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
- கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சியானது திருப்திகரமான மட்டத்தைக் காட்டிலும் குறைவாக காணப்படுகின்றது

- உள்நாட்டுச் சந்தைக்கான உற்பத்திகளின் இறக்குமதி உள்ளடக்கம் பெரும்பாலும் உயர்ந்தளவில் காணப்படுவதுடன் இதுவும் விசேட கவனம் செலுத்தப்படவேண்டிய விடயமொன்றாகும்




# முடக்கல் நிலைமை மற்றும் சுற்றுலாப்பயணிகளின் வீழ்ச்சி என்பவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனை நிலையங்கள் பல்வேறு கடுமையான பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளன...

- ஏறக்குறைய பூச்சிய சுற்றுலாப் பயணிகளின் வருகையானது அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றாளர்களின் புரள்வு தேவைப்பாடுகளை பாதித்துள்ளது
- செயற்பாடற்ற காரணத்தினால் சில அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டு செலாவணி பரிமாற்றாளர்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன
- "இணையான" செலாவணி வீத சந்தை நடவடிக்கைகளின் எழுச்சியானது வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டுச் செலாவணிகளின் திரவத்தன்மைக்கு தடையாகவுள்ளன

- உத்தியோகபூர்வமற்ற வெளிநாட்டுச் செலாவணி முறைகள் அதிகரித்து வருகின்ற அதேவேளையில் உத்தியோகபூர்வ செலாவணி வீதங்கள் மற்றும் "உத்தியோகபூர்வமற்ற சந்தை" (grey-market) செலாவணி வீதங்கள் என்பவற்றிற்கிடையில் காணப்படும் பரந்த எல்லையொன்றின் காரணமாக அலுவல்சார் பணவனுப்பல் பாய்ச்சல்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன

- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்வோர்களின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வேண்டியது உடனடி தேவையாக உள்ளது.

தொழிலாளர் பணவனுப்பல்கள்




# நிச்சயமற்ற தன்மையினால் பாதிக்கப்பட்ட சில்லறை மற்றும் மொத்த விற்பனையாளர்களின் பதிலிறுப்புக்கள் நிலைமையை தீவிரமடைய செய்துள்ளன...

- மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் ஏற்படுத்திய இருப்புத் தேக்கம் உணவு விநியோகத்தின் மீதான பதற்றத்தினை ஏற்படுத்தியிருந்ததுடன் அது அரசாங்கத்தின் வலுவான பதிலிறுப்புக்களுடன் கையாளப்பட வேண்டியிருந்தது
- குறிப்பாக அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் நீண்ட கால நுகர்வு பொருட்கள் என்பவற்றின் சில்லறை மற்றும் மொத்த விலைகளில் நியாயமற்ற அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது
- இருப்பினும், அத்தகைய உயர் நுகர்வோர் விலைகளினால் உற்பத்தியாளர்கள் நன்மையடையவில்லை
- கட்டுப்பாட்டு காலங்களில் பழுதடையக்கூடிய பொருட்களில் அதிகளவான விரயம் ஏற்பட்டுள்ளது

- இவ்விடயங்கள் சந்தையில் பல்வேறு விலை உச்சவரம்புகளைத் தேவைப்படுத்தியிருப்பதுடன் அதன் மூலம் சந்தை பொறிமுறைகள் பிறழ்வுப்படுத்தப்பட்டிருந்தன


உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு)



# வதியாத இலங்கையர்கள் மூலமான தொழிலாளர் பணவனுப்பல்கள் கலப்புப் பெறுபேறுகளை பதிவுசெய்திருந்தன...

- தொழிலாளர் பணவனுப்பல்கள் யூன் 2020 முதல் ஏப்பிறல் 2021 வரையான காலப்பகுதியில் தொடர்ச்சியாக மாதமொன்றிற்கு ஐ.அ.டொ.500 மில்லியனை பதிவு செய்திருந்தபோதிலும், சமீபத்திய மாதங்களில் அது மிதமடைந்திருந்தது

- வெளிநாட்டு செலாவணி வருவாயை ஈட்டுபவர்கள் உத்தியோகப்பூர்வமற்ற முறைகளைப் பயன்படுத்துவதற்கு தூண்டுகின்ற உத்தியோகப்பூர்வ மற்றும் உத்தியோகப்பூர்வமற்ற முறைகளுக்கிடையில் தற்போது நிலவுகின்ற பாரிய செலாவணி வீத பிறழ்வுகள் மற்றும் அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களின் எண்ணிக்கை என்பன இப்போக்கிற்கான முக்கிய பங்களிப்பு காரணிகளாக அமையலாம்





- **2021 ஓகத் : ஐ.அ.டொ 447 மில் (-32.8%, ஆண்டிற்காண்டு)**
- **2021 (சன-ஓக) : ஐ.அ.டொ 4,224 மில் (-2.8%, ஆண்டிற்காண்டு)**
- **2020 (சன-ஓக) : ஐ.அ.டொ 4,346 மில்**
- **2020: தொழிலாளர் பணவனுப்பல்கள் 5.8%இனால் (ஆண்டிற்காண்டு) அதிகரித்திருந்தன**

# வெளிநாட்டு பங்கேற்பானது குறைவடைந்த போதிலும் இலங்கைப் பங்குகள் மற்றும் பிணையங்களும் சிறப்பாக செயற்பட்டிருந்தன…

- வெளிநாட்டவர்கள் பங்குரிமை மூலதனம் மற்றும் அரச பிணையங்களில் முதலீடு செய்வதிலிருந்து படிப்படியாக விலகியுள்ளனர்
- படுகடன் மீள்செலுத்தல்களில் இலங்கை அப்பழுக்கற்ற பதிவுகளைப் பேணிக்கொண்ட போதிலும் தரமிடல் குறைக்கப்பட்டமையினால் தூண்டப்பட்ட தேவையற்ற அச்ச நிலைமையை மோசமடையச் செய்திருந்தது
- இலங்கை ரூபாவின் பெறுமதித் தேய்வு மீதான அச்சமும் காரணியொன்றாக இருந்து வருகின்றது

- இருப்பினும், கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையானது அதிகரித்த உள்நாட்டு முதலீட்டாளர் ஆர்வத்துடன் பிராந்தியத்தில் சிறந்த செயலாற்றல் வாய்ந்த பங்குரிமை மூலதனச் சந்தைகளில் ஒன்றாக தொடர்ந்தும் காணப்படுகின்றது
- புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமானது ஆர்வத்திற்கு புத்துயிரளிக்கும்

## அனைத்து பங்கு விலைச்சுட்டெண்



Source: Colombo Stock Exchange

வெளிநாட்டவர் வசமுள்ள அரச பிணையங்கள் மற்றும் பங்குரிமை (ஐ.அ.டொலரில்)

| | 2014 இறுதி | 2021 செத் இறுதி |
|---|---|---|
| அரச பிணையங்கள் | 3,489 மில் | 9 மில் |
| பங்குரிமை (கொ.ப.ப) | 6,806 மில் | 3,970 மில் |


## முக்கிய பங்கு சுட்டெண்களின் அசைவுகள் - 2021

| | YTD* (%) |
|---|---|
| Sri Lanka (ASPI) | +39.6% |
| India (Sensex) | +23.8% |
| US (S&P 500) | +16.1% |
| Germany (DAX) | +11.9% |
| Australia (ASX 200) | +11.3% |
| Japan (Nikkei) | +7.3% |
| UK (FTSE) | +10.4% |
| Korea (KOSPI) | +6.8% |
| Singapore (STI) | +8.5% |
| Hong Kong (HSI) | -9.8% |

*30 Sep 2021

Source: marketwatch


## அரச பிணையங்கள் மற்றும் கொழும்பு பங்குச்சந்தை என்பவற்றின் மீதான தேறிய வெளிநாட்டு முதலீடுகள் (ஐ.அ.டொ.மில்லியன்களில்)




## நிலவும் கடினமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றை அடைந்துகொள்வதில் மத்திய வங்கியும் சவால்களை எதிர்கொண்டிருந்தது...

- வெளிநாட்டு ஒதுக்குகள் குறைவடைதல்
- செலாவணி வீதம் மீதான அழுத்தம்
- நாணயத் தூண்டலுக்கு ஆதரவளிக்க வேண்டியதுடன் நடுத்தர காலத்தில் சாத்தியமான பணவீக்க அழுத்தங்களை கையாளல்
- நாணய ஊடுகடத்தல் பொறிமுறைக்கான தடங்கல்கள்


### அலுவல்சார் மொத்த ஒதுக்குகள்





### அண்மைய செலாவணி வீத அசைவுகளின் போக்கு





### மத்தி வங்கி வசமுள்ள அரச பிணையங்கள் (முகப்பெறுமதி)




### திறைசேரி உண்டியல்களின் விளைவும் துணைநில் வட்டிவீத வீச்சும்





### வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்




(a) ISB year end outstanding from end 2021 are forecast assuming no new issuances.


### மத்திய அரச படுகடன் மீதான செலாவணி வீதத்தின் தாக்கம்



# பல்வேறு அரசாங்க கொள்கை பதிலிறுப்புக்கள் உதவுவதாக காணப்பட்ட போதிலும் உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக இலங்கை மக்கள் சவால்களை எதிர்கொண்டிருந்தனர்...


- ஊகக் கேள்வி இறக்குமதிகளை தூண்டியிருந்தது
- மாற்றத்திற்கான எதிர்ப்பு (உதாரணம், சேதன வளமாக்கி கொள்கை)
- நிலவும் முடக்கல் மற்றும் பன்னாட்டு பயணங்களின் மெதுவான மீட்சி போன்றன குறிப்பாக சுற்றுலா துறையிலுள்ள முறைசாரா தொழிலாளர்களை கடுமையாக பாதித்துள்ளன
- உள்முக பணவனுப்பல்களின் வீழ்ச்சி
- முடக்கல் விளைவு
  - 2020: 66 நாட்கள் கடுமையான முடக்கல் நிலை
  - 2021: 42 நாட்கள் குறைந்தளவான முடக்கல் நிலை

## பெயரளவு மொ.உ.உ. இழப்பு* (ஆண்டிற்காண்டு)




Source: Department of Census and Statistics

## தொழிலின்மை வீதம் மற்றும் தொழிற்படை பங்கேற்பு வீதம்




Source: Department of Census and Statistics

## சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்



Sources: SLTDA, Central Bank of Sri Lanka

## கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவுகளை தணிப்பதற்கான அரசாங்கத்தின் ஒதுக்கீடு



Source: Ministry of Finance

*செயற்பட்டியல்* மாதிரியில் நாம் இன்று கோடிட்டுகாட்டும் கட்டமைப்பானது இலங்கையானது அடுத்த ஆறு மாதங்களிலும் அதற்கு பின்னரான காலப்பகுதிகளிலும் சந்திக்கின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு உதவும்...

# செயற்பட்டியலானது முக்கிய சவால்களுக்கு பதிலிறுத்துவதாக காணப்படுவதுடன் முக்கிய ஆர்வலர்களையும் உள்ளடக்குகின்றது...

- அரசாங்கம்
- மத்திய வங்கி
- வங்கித்தொழில் துறை/வங்கியல்லா தொழில் துறை
- வணிக ஏற்றுமதியாளர்கள்
- பணிகள் ஏற்றுமதியாளர்கள்
- இறக்குமதியாளர்கள்
- கைத்தொழிலாளர்கள் /ஆதன விருத்தியாளர்கள்
- கடன்பாட்டாளர்கள்/ சேமிப்பாளர்கள்
- வெளிநாட்டுச் செலாவணி பரிவர்த்தனை நிலையங்கள்
- வெளிநாட்டிலிருந்து பணவனுப்புபவர்கள்
- பங்குச் சந்தை/ கம்பனிப் படுகடன் சந்தைத் தொழிற்பாட்டாளர்கள்

**செயற்பட்டியலானது** பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றிற்கு அச்சுறுத்தலாக அமைகின்ற முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தும்...

## முக்கிய பிரச்சனைகள்

- படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கரிசனைகள்
- நிதியியல் துறை கரிசனைகள்
- பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு கரிசனைகள்

# முக்கிய பிரச்சனைகள்

**படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கரிசனைகள்**

நிதியியல் துறை கரிசனைகள்

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு கரிசனைகள்

# படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பிரச்சனைகளை தீர்த்தல்:

# அரசாங்கம்

செயற்பட்டியல்

- சனாதிபதி பணிக்குழு மூலமாக வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சல்களை (ஏற்றுமதிகள் மற்றும் முதலீடுகள்) நெருக்கமாக கண்காணித்தல் (இலக்கானது ஏற்றுமதியை 2021இன் எஞ்சியிருக்கம் காலத்தில் மாதமொன்றிற்கு சராசரியாக ஐ.அ.டொ 1.0 பில்லியனுக்கு மேலாக அதிகரித்தலாகும்) – (தொடரப்படுகின்றது)
- உட்பாய்ச்சல்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு குறுகிய மற்றும் நடுத்தரகாலத்தில் அரசாங்கத்திடமிருந்து அரசாங்கத்திற்கு எனும் அடிப்படையிலான நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்புடைய அரசாங்கங்களுடன் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல் (குறுங்கால இலக்கு: ஐ.அ.டொ. 1.0 பில்லியன்): அடுத்த மூன்று மாதங்களில்: ஐ.அ.டொ. 500 மில்லியன்) – (தொடரப்படுகின்றது)
- தெரிவுசெய்யப்பட்ட மூலோபாயமற்ற/குறைந்தளவு பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை பணமயமாக்கல் (இலக்கு: ஐ.அ.டொ. 1.0 பில்லியன்) – (தொடரப்படுகின்றது)
- துறைமுக நகரத்திற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதற்கு துறைமுக நகர ஆணைக்குழு துணைச் சட்டங்களை வெளியிடுதல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- புதிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதற்காக பல்வேறு பகுதிகளில் மருந்தாக்கல் மற்றும் பிற கைத்தொழில்களுக்கான பிரத்தியேக கைத்தொழில்துறை வலயங்களை ஊக்குவித்தல் – (தொடரப்படுகின்றது)
- நிதிச் சட்டத்தின் மூலம் வரி பொது மன்னிப்பை நடைமுறைப்படுத்தி உட்பாய்ச்சல்களை எளிதாக்குதல் (இலக்கு: ஐ.அ.டொ. 100 மில்லியன்) – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- பொருளாதாரத்தின் உண்மையான அளவை பிரதிபலிக்கும் வகையில், மேலதிக தாமதமின்றி (1½ வருடங்களாக தாமதமாகியுள்ளது) மொத்த உள்நாட்டு உற்பத்தியை மீள்தளமிடல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- விரிவான நிதியீட்டல் உபாயங்களுடன் வியாபாரத்திற்குச் சாதகமான வரவுசெலவுத் திட்டத்தை அறிவித்தல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)

## படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பிரச்சனைகளை தீர்த்தல்:

# அரசாங்கம்

செயற்பட்டியல்

- பொருத்தமான வரிச்சீராக்கங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாக ஏற்றுமதிகளின் உள்நாட்டு பெறுமதி சேர்ப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் ஏற்றுமதி வருவாய்களின் மாற்றீடுகளை நிச்சயப்படுத்தல்; இணையவழி மற்றும் முறைசாரா முறைகள் மூலமாக வெளிநாட்டுச் செலாவணி கசிவுகளை ஊக்கமிழக்கச் செய்தல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- இறக்குமதி மாற்றீடுகளை ஊக்குவித்தல் – (தொடரப்படுகின்றது)
- வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்கள் வெளிநாட்டுச் செலாவணியில் அரசாங்கத்திற்குரிய வரிகளை செலுத்துவதன் முலம் தங்களது வெளிநாட்டு வருவாயைப் பயன்படுத்தி இலங்கைக்கு மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும் பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துதல் – (கருத்திற் கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது)
- சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக நாட்டை உடனடியாக தயார்ப்படுத்தல் – (தொடரப்படுகின்றது)
- வேளிநாட்டில் தொழில்புரியும் தொழிவலாளர்களால் அனுப்பப்படுகின்ற மற்றும் பரிமாற்றப்படுகின்ற ஒவ்வொரு ஐ.அ.டொலரிற்கும் ரூ.2 மேலதிகமாக வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டமானது தொடரப்படும் – (தொடரப்படுகின்றது)
- சிறப்பு வைப்பு கணக்கிற்கான மேலதிக வட்டிக்கொடுப்பனவினை தொடருதல் – (தொடரப்படுகின்றது)

## படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி சிக்கல்களை தீர்த்தல்:

## மத்திய வங்கி

**செயற்பட்டியல்**

- வலுப்பட்டியல்களின் பகுதியளவு நிதிப்படுத்தலை மேற்கொள்வதற்கு செலாவணி சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையை வழங்கல் – (தொடரப்படுகின்றது)
- பன்னாட்டு இணைத்தரப்பினர்களுடன் குறுகிய கால நாணயப் பரஸ்பர பரிமாற்றங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துதல் (இலக்கு: ஐ.அ.டொ. 1.5 பில்லியன்) – (தொடரப்படுகின்றது)
- அரசாங்கத்திற்கு அரசாங்கம் அடிப்படையிலான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களுக்கு வசதியளித்தல் – (தொடரப்படுகின்றது)
- 2024ஆம் ஆண்டிற்குள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிப்படுத்துகைகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% வரை படிப்படியாகக் குறைத்தல் மற்றும் அதன்பின்னர் அதனை பேணுதல் – (தொடரப்படுகின்றது)
- படுகடனை உருவாக்காத வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு வசதிப்படுத்தல் – (தொடரப்படுகின்றது)
- உறுதியளிக்கப்பட்ட பற்றுக்களை அனுமதித்ததன் பின்னர் ஏற்றுமதி பெறுகைகளை மாற்றுவதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு பணிப்புரைகளை வெளியிடல் (இலக்கு மாதமொன்றுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 0.5 பில்) – (தொடரப்படுகின்றது)
- அடுத்த 6 மாதங்களில் தளம்பல் அடிப்படையில் 2020இலிருந்து திரட்டப்பட்டுள்ள ஏற்றுமதி பெறுகைகளை மாற்றுவதற்கான பணிப்புரைகளை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குதல் (மாதமொன்றுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொ. 0.3 பில்) – (தொடரப்படுகின்றது)

## படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பிரச்சனைகளை தீர்த்தல்:

# மத்திய வங்கி

செயற்பட்டியல்


- வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சல்களை கண்காணிப்பதற்கான முறைமைகளை நிறுவுதல் மற்றும் திருப்பியனுப்பல் மற்றும் மாற்றீட்டு ஒழுங்குமுறைப்படுத்தலுடனான இணங்குவிப்பை வலுப்படுத்தல் – (தொடரப்படுகின்றது)
- அரசப்பிணையங்களின் மீதான வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் (இலக்கு: ஐ.அ.டொ. 1.0 பில்) – (தொடரப்படுகின்றது)
- இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீட்டாளர் தளத்தினைப் பன்முகப்படுத்தல் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான வெளிநாட்டு முதலீடுகளை கவர்தல் - அடுத்த ஆறு மாதங்களில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் பூரணமான திரட்டலிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- அரச பிணையங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்வதனை படிப்படியாக இலகுப்படுத்தல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- நாட்டிற்கான கொடுகடன் தரமிடல்களின் மேம்பாட்டிற்கு வசதியளித்தல் – (செய்யப்பட வேண்டியுள்ளது)
- உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினைக் கருத்திற்கொண்டு, அடுத்த மூன்று மாதங்களில் ஐ.அ.டொலரிற்கெதிராக ரூபாவை ரூ.199 தொடக்கம் ரூ.203இற்குள் போட்டித்தன்மை வாய்ந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் அதன் பின்னர் அதனை மீளாய்வு செய்தல் (தொடரப்படுகின்றது)

...இவற்றுள் சில அடுத்த சில காட்சிகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன

# நிதியியல் பாய்ச்சல்களின் மாற்றுதல் மற்றும் நெருக்கமான கண்காணிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்...

- வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை கண்காணிப்பதற்கான பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கி ஏற்கனவே தொடங்கியுள்ளது
  - பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது வெவ்வேறுபட்ட ஏற்றுமதிசார் துறைகளின் செயலாற்றத்தினையும் அவற்றின் நிதி மீளனுப்பல்கள் மற்றும் மாற்றுதல்கள் என்பவற்றை உன்னிப்பாகக் கண்காணிக்கும்
  - பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது வெளிநாட்டுத் துறையுடன் தொடர்புடைய தகவலை அறிந்து தீர்மானம் மேற்கொள்வதனை இயலுமைப்படுத்துவதற்கான சிறந்த தரவுகளை வழங்கும்
  - பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது 2022 சனவரி 1ஆம் திகதியிலிருந்து செயற்பாட்டிற்கு வரும்

## முன்மொழியப்பட்ட பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையும் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளும்



# அரசப்பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்வதானது உத்வேகம் பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது...

- திறைசேரி உண்டியல்கள்/முறிகளுக்கான சாத்தியமான முதலீடுகளை பெற்றுக்கொள்வதில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் இடையீட்டாளர்களை ஈடுபடுத்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடரப்படும்
- வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை (பூச்சிய செலவினமுடைய பரஸ்பரப் பரிமாற்றல்) நீக்குவதற்கு மத்திய வங்கியுடனான பரஸ்பரப் பரிமாற்றலை மேற்கொள்வதற்கான கவர்ச்சிகரமான வருவாய்கள் மற்றும் சாத்தியமான வாய்ப்புக்கள் குறுகிய காலத்தில் புதிய முதலீடுகளை செய்வதற்கு வசதியளிக்கும்
- நிலவும் வட்டிவீதங்களில் கணிசமான எண்ணிக்கையில் இரண்டாந்தர சந்தையில் மற்றும்/அல்லது நேரடி வழங்கல் மூலமாக கோரிக்கை செய்ய முடியும்
- மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளில் இலங்கையின் முதலீட்டு வாய்ப்புக்களை சந்தைப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்த பிராந்தியங்களுடனான நேரடி சந்திப்புக்களுடன் 2021 ஒத்தோபர் ஆரம்பப்பகுதியில் தொடங்கும்
- ஜரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளுடனான மெய்நிகர் சந்திப்புக்களும் நேரடி சந்திப்புக்களும் இடம்பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது

# இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான வெளிநாட்டு முதலீடுகளை கவருவதற்காக இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீட்டாளர் தளமானது பன்முகப்படுத்தப்படும்...

## இலங்கை அபிவிருத்தி முறிகளின் அண்மைக்கால வழங்கல் குறிகாட்டிகள்...

- இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஐ.அ.டொ. 1,002.4 மில்லியன் பெறுமதியானது அடுத்த ஆறு மாதங்களில் முதிர்வடையும்
- அடுத்த ஆறு மாதங்களில் முதிர்வடையும் இலங்கை அபிவிருத்தி முறிகளின் 88.9% உள்நாட்டு வங்கிகளின் வசமுள்ளது
- இலங்கை அபிவிருத்தி முறிகளின் மீதான திரட்சிப்படுத்தல் உள்நாட்டு வங்கித்தொழில் துறை முதலீடுகளுக்கு சாதகமாக அமைகின்றது
- கம்பனித் துறையின் முதலீட்டாளர் முன்னுரிமையில் ஏற்பட்டுள்ள படிப்படியான அதிகரிப்பானது அண்மைய வழங்கல்களில் அவதானிக்கப்பட்டது
- வழங்கல்களின் அண்மைய முதிர்ச்சிக்கான சராசரிக் காலமானது குறுகிய கால முதிர்வுகளைச் சார்ந்ததாக அமைகின்றது
- முதலீட்டாளர் முன்னுரிமையானது நிலையான வீத இலங்கை அபிவிருத்தி முறிகளில் அவதானிக்கப்பட்டது

## இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீடுகள் மீதான உடனடிக் கவனம்...


- மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தும் தகுதிவாய்ந்த உள்நாட்டு முதலீட்டாளர்களிலிருந்தும் இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான நிறுவன முதலீட்டாளர்களை (அரசு மற்றும் தனியார்) கவர்தல்
- திரட்சிப்படுத்தப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீட்டாளர் தளத்தைப் பன்முகப்படுத்தல்
- தொகுதி வாரியாக ஐ.அ.டொ. 50 மில்லியனிலிருந்து ஐ.அ.டொ. 50 மில்லியனின் பெருக்கமாக இலங்கை அபிவிருத்தி முறிகள் சந்தைப்படுத்தப்படும்
- ஏதிர்வரும் முதிர்வுகளுக்கு முன்னதாக முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும்
- பொருந்தக்கூடிய விளைவு வீதங்கள் மற்றும் முதிர்வுகள் என்பன மிக அண்மைய முதலாந்தர வழங்கல்கள் மற்றும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்

**எதிர்பார்க்கப்படும் பெறுபேறு;** அடுத்த ஆறு மாதங்களில் ஏறத்தாழ ஐ.அ.டொ. 300 மில்லியனை திரட்டுதல்

**இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் (ஐ.அ.டொ.மில்)**

| காலப்பகுதி | இலங்கை அபிவிருத்தி முறிகள் - மூலதனம் | இலங்கை அபிவிருத்தி முறிகள் - வட்டி |
|---|---|---|
| ஒத் 2021 தொடக்கம் மார் 2022 மொத்தம் | 1,002.4 | 65.5 |
| 2022 மொத்தம் | 1,404.8 | 98.7 |
| 2023 மொத்தம் | 606.7 | 34.9 |
| 2024 மொத்தம் | 206.1 | 10.1 |
| 2025 மொத்தம் | 20.9 | 1.2 |
| 2026 மொத்தம் | 6.9 | 0.5 |

# உள்நாட்டு சந்தையில், நிதியிடல் முயற்சிகள் சந்தை முன்னேற்றங்களுடன் சீரமைக்கப்படுவதுடன் ஆண்டொன்றிற்குள் படுகடன் முதிர்ச்சிகள் படிப்படியாக குறைக்கப்படும்...





- முக்கியமாக உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலை மற்றும் அரசாங்கத்தின் நிதியியல் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு திறைசேரி உண்டியல்களில் தங்கியிருத்தல் என்பவற்றின் முக்கிய காரணமாக குறுகிய காலப்படுகடனின் அதிகரிப்பானது தூண்டப்பட்டிருந்தது
- குறுகிய காலத்தில், திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சியடைந்த பகுதியை திறைசேரி முறிகளுக்கு மாற்றுவதற்கான சாத்தியமான தெரிவுகள் ஆராயப்படும்
- திறைசேரி முறிகள் மற்றும் புதிய திறைசேரி உண்டியல்களின் ஏல முறைமையின் நேரடி வழங்கல் மையமானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் அண்மைக்கால திறைசேரி முறிகளின் திரட்டல் அளவுகளை குறைப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது
- மத்திய வங்கி 5, 10, 15, 20 மற்றும் 30 வருட முதிர்வுகளின் கால அளவுகளுக்கு தொடர் அடிப்படையிலான திறைசேரி முறி வழங்கலினை அறிமுகப்படுத்துவதற்கான வழிகளையும் ஆராய்கின்றது
  - வழங்கலின் அளவானது மட்டுப்படுத்தப்படுவதுடன் விளைவுகள் 364 நாட்கள் முதிர்வு கால அளவு திறைசேரி உண்டியலின் விளைவுடன் கூடிய எல்லையொன்றுடன் இணைக்கப்படும்
  - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கோரிக்கை விடுவதற்கு அழைக்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது


# நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் படுகடன் இருப்பின் அளவானது நடுத்தர காலத்தில் படிப்படியாக குறைக்கப்படுவதுடன் மொ.உ.உற்பத்தியுடன் இணைக்கப்படும்...

- 2019ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 18% ஆகவும், 2020ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 17% ஆகவும் இருந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெளிப்பாடுகளை 2021 இறுதியளவில் 16%இற்கும் அடுத்த 3 ஆண்டுகளில் ஏறத்தாழ 10%இற்கும் குறைப்பதானது அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினது கொள்கையாகும்


வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறி மற்றும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி



உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தினைக் கருத்திற்கொண்டு, அடுத்த மூன்று மாதங்களில் ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபாவை ரூ.199இலிருந்து ரூ.203இற்கு போட்டித்தன்மை வாய்ந்த மட்டத்தில் பேணுவதற்கும் அதன் பின்னர் அதனை மீளாய்வு செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்...



## வெளிநாட்டு செலாவணி ஒதுக்கங்களை முகாமை செய்வது தொடர்பில், கடன் வாங்குதல் மற்றும் குறைந்த வருவாய் தரும் உலக சொத்துக்களில் முதலீடு செய்தல் ஊடாக ஒதுக்கத்தை கட்டியெழுப்பல் என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டிற்கு உரிய மரியாதை செலுத்தப்படும்...




- இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கடன்பாடுகள் ஊடாக சராசரியாக 6.8%இனை செலுத்துகின்ற அதேவேளை அத்தகைய வருவாய்களை மேற்கத்தேய நாடுகளில் மீள்முதலீடு செய்வதன் ஊடாக 1.4% வருவாயை பெற்றுக்கொள்கின்றது

பிராந்திய பொருளாதாரங்களுடனான உறவை வலுப்படுத்தும் அண்மைக்கால முயற்சிகள் கீழ்வருவனவற்றின் மீது அதிக கவனம் செலுத்துவதனூடாக மேலும் பலப்படுத்தப்படும்:

- தெற்காசியா
- மத்திய கிழக்கு
- கிழக்கு மற்றும் தென் கிழக்காசியா



ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## *படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பிரச்சனைகளை தீர்த்தல்:*

## வங்கித்தொழில்/ வங்கியல்லாத் தொழில் துறை

**செயற்பட்டியல்**

- வங்கிகள்/நிதியியல் நிறுவனங்களுக்குரிய ஐந்தொகைகளின் உறுதித்தன்மையின் அடிப்படையில் போட்டித்தன்மையிலான நியதிகளில் புதிய வெளிநாட்டுச் செலாவணி நிதியத்தை திரட்டல் (இலக்கு: ஐ.அ.டொ. 1.5 பில்) (செய்யப்பட வேண்டியுள்ளது)
- வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்களை முன்மதியுடைய விதத்தில் ஆராய்கின்ற அதேவேளை வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளை நெருக்கமாக கண்காணித்தல் (செய்யப்பட வேண்டியுள்ளது)
- நிதிச் சட்டத்தின் மூலம் வரி பொது மன்னிப்பினை நடைமுறைப்படுத்தி உட்பாய்ச்சல்களை எளிதாக்குதல் (செய்யப்பட வேண்டியுள்ளது)
- இலங்கையின் அரச பிணையங்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளில் செலாவணி முதலீடுகளை ஊக்குவித்தல் (செய்யப்பட வேண்டியுள்ளது)
- தேவைப்படுமிடத்து, அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு வசதிப்படுத்தல் (தொடரப்படுகின்றது)
- படுகடன் சூழ்நிலை மீதான தேவையற்ற ஊகங்களைத் தணிப்பதற்கும் இலங்கைப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் முறைமை தொடர்பில் அவர்களின் அறிவினை மேம்படுத்துவதற்கும் இணைத்தரப்பினர்களுடன் தொடர்பினைப் பேணல் (தொடரப்படுகின்றது)
- வங்கியல்லாதொழில் துறை நிறுவனங்களில் மீது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு ஆதரவளித்தல் (செய்யப்பட வேண்டியுள்ளது)
- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான பங்குரிமை நிதியங்களை தாபிப்பதற்கு ஆதரவளித்தல் (செய்யப்பட வேண்டியுள்ளது)

## *படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:* வணிக ஏற்றுமதியாளர்கள்

### செயற்பட்டியல்

- குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் ஏற்றுமதிப் பெறுகைகளின் மீளனுப்பல்களை உறுதிப்படுத்தல் - (தொடரப்படுகின்றது)
- இடைநிலை மற்றும் முதலீட்டு உள்ளீடுகளுக்கு வெளிநாட்டுச் செலாவணியின் அனுமதிக்கப்பட்ட தொகையினை கழித்ததன் பின்னர் மீளனுப்பப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவுக்கு மாற்றல் - (செய்யப்பட வேண்டியது)
- மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு அமைவாக 2020 இலிருந்து வங்கிகளுடன் வெளிநாட்டுச் செலாவணி வைப்புக்களில் ஏற்கனவே திரட்டப்பட்ட ஏற்றுமதிப் பெறுகைகளை மாற்றல் - (செய்யப்பட வேண்டியது)
  - ஏற்றுமதியாளர்கள் ஆறு மாதத்திற்குள் திரண்ட மீதிகளை விகிதாசாரமாக மாற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது
  - ஏற்றுமதி வருவாய்களுக்கான விசேட வட்டியீட்டாத வெளிநாட்டுச் செலாவணி நடைமுறைக் கணக்குகளின் அறிமுகம் மாற்றல்களை ஊக்குவிக்கும்

- உற்பத்தி மற்றும் சந்தை பண்முகப்படுத்தல் ஊடாக ஏற்றுமதி வியாபாரங்களை விரிவுப்படுத்தல் - (தொடரப்படுகின்றது)
- உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட/உயர் பெறுமதி பொருட்களை நோக்கிய நகர்விற்கான தளத்தை அமைத்தல் - (தொடரப்படுகின்றது)
- வியாபார விரிவுப்படுத்தலுக்காகவும் உள்நாட்டு பெறுமதி சேர்த்தலை உயர்த்துவதற்கும் வெளிநாட்டு முதலீடுகளை கவர்தல் - (தொடரப்படுகின்றது)
- இலங்கை வர்த்தகக் குறியை விருத்திசெய்தல் - (தொடரப்படுகின்றது)

# தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு

**(தனி நபர்களின் வதியாதோர்/வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என முன்னர் அழைக்கப்பட்டவை)**

## எவ்வித மாற்றங்களும் செய்யப்படாது

***என்பதுடன் அவை தற்போதுள்ள வசதிகளையும் முன்னுரிமைகளையும் எந்த மாற்றமுமின்றி அனுபவிக்க முடியும்!***

## படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:

## பணிகள் ஏற்றுமதியாளர்கள்

செயற்பட்டியல்

- பணிகள் ஏற்றுமதிகளை விரிவுபடுத்துவதுடன் உலகளாவிய பரவலினை மேம்படுத்தல், குறிப்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பணிகள் - (தொடரப்படுகின்றது)
- பணிகள் ஏற்றுமதிகளின் பெறுகைகளை மீளனுப்புதல் மற்றும் மாற்றுதலினை உறுதிப்படுத்தல் மற்றும் பணிகளுடன் தொடர்புடைய வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்களைக் கண்காணிக்கின்ற முறைமைகளைப் பின்பற்றுதல் - (செய்யப்பட வேண்டியது)
- சுற்றுலாத் துறையினை மீள ஆரம்பிப்பதற்கு தயார்படுத்தல் அத்துடன் பெறுகைகளின் மீளனுப்புதலையும் மாற்றுதலையும் உறுதிப்படுத்தல் - (தொடரப்படுகின்றது)

## *படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:* இறக்குமதியாளர்கள்

செயற்பட்டியல்

- இறக்குமதிகளுக்கான ஊகக் கேள்வியினையும் பாரிய இருப்புக்கள் கட்டியெழுப்பப்படுவதனையும் தவிர்த்தல்- (தொடரப்படுகின்றது)
- ஊக விலை அதிகரிப்புக்களினூடாக அசாதாரணமான இலாபங்களினை உருவாக்காமல் நியாயமான இலாபத்துடன் உள்நாட்டுச் சந்தைக்கு பண்டங்களை வழங்குதல் - (தொடரப்படுகின்றது)
- உள்நாட்டு உள்ளீடுகளைப் பயன்படுத்துவதனை விசேட நோக்காகக் கொண்டு வியாபாரங்களைப் பன்முகப்படுத்தல்
- எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் அடிப்படையில் 'அத்தியாவசியமற்ற/அவசரமற்ற இறக்குமதிகள்'மீதான பண எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் நீக்கப்படும்

## படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:

## கைத்தொழிலாளர்கள் /ஆதன விருத்தியாளர்கள

செயற்பட்டியல்

- உள்நாட்டு உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் ஊகக் கொள்வனவுகளைத் தவிர்த்தல் - (தொடரப்படுகின்றது)
- உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கான உற்பத்தியில் முதலிடுவதனூடாகப் புதிய வாய்ப்புக்களைக் கண்டறிதல் - (தொடரப்படுகின்றது)
- அதிகரித்த உள்நாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான பங்குடமைகளினூடாக மருந்தாக்கல் மற்றும் ஏனைய கைத்தொழில்களுக்கான தனிப்பயனான கைத்தொழில் வலயங்களைப் பயன்படுத்தல் - (செய்யப்பட வேண்டியது)
- கூட்டுறுதி தொடர்மாடிகள் உள்ளடங்கலாக இலங்கையின் உண்மைச் சொத்திற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்கான நடவடிக்கைகளை விரிவுபடுத்தல் - (செய்யப்பட வேண்டியது)
- வதிவிட/ நீண்ட கால விசா ஊக்குவிப்புக்களைப் பயன்படுத்தி இலங்கையின் உண்மைச் சொத்துக்களிலும் அதேவேளை களஞ்சியசாலை, செருகி உபயோகிக்கும் மென்பொருள் பணிகள் (ிடரப ரூ ிடயல) மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான தனிப்பயனான வலயங்களிலான முதலீடுகளிலும் வெளிநாட்டு முதலீட்டினை மேம்படுத்தல் - (செய்யப்பட வேண்டியது)

*படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:*

# வெளிநாட்டுப் பரிவர்த்தனை நிலையங்கள்

செயற்பட்டியல்

- தற்போதுள்ள மற்றும் மீள்செயற்படுத்தப்பட்ட உரிமங்களினைப் பயன்படுத்தி முறைசார் வழிமுறைகளினூடாக வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை உறுதிப்படுத்தல் - (செய்யப்பட வேண்டியது)
- வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்களுக்கு முறைசாரா மற்றும்/ அல்லது சட்ட ரீதியற்ற வழிமுறைகளைத் தவிர்த்தல் - (தொடரப்படுகின்றது)
- வேறுபட்ட செலாவணி வீதங்களில் சமாந்தரச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தவிர்த்தல் - (தொடரப்படுகின்றது)
- சுற்றுலா மீளஆரம்பித்தலுக்கான ஆயத்தங்களுடன் வணிகவளாகங்களில் பாதுகாப்பான பிரச்சன்னத்துடன் கடை முகப்புக்களை நவீனமயப்படுத்துதல் - (செய்யப்பட வேண்டியது)

## *படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:*

## தமது வருவாய்களை பணவனுப்பல்களாக அனுப்புவர்கள்

செயற்பட்டியல்

- பெறுகைகள் மற்றும் சேமிப்புக்களை முறைசார் வழிமுறைகளினூடாக அனுப்புதல் - (தொடரப்படுகின்றது)
- உள்நாட்டில் இலங்கை ரூபாவிலான உயர் வட்டி வீத வாய்ப்புக்களைப் பயன்படுத்தல் - (தொடரப்படுகின்றது)
- உள்நாட்டு வங்கிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதுடன் தற்போது அவர்களால் வழங்கப்படுகின்ற வசதிகளையும் பயன்படுத்துதல் - (தொடரப்படுகின்றது)
- கடினமாக உழைத்த பணத்தினை அனுப்பும் போது அங்கீகரிக்கப்படாத இடர்நேர்வுடைய வழிமுறைகளைத் தவிர்த்தல் - (தொடரப்படுகின்றது)

*படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்:*

**பங்குச் சந்தை மற்றும் கம்பனிப் படுகடன் சந்தைப் பங்கேற்பாளர்கள்**

செயற்பட்டியல்

- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வட்டி வீதத்திலும் உறுதிப்பாடு திரும்பியதன் மூலம் முதலீடு மற்றும் விரிவாக்கத்திற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்தல்
- புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் சட்டவாக்கத்தின் விளைவாக பங்கு மூலதனத்தையும் கம்பனிப் படுகடன் சாதனங்களையும் உலகளாவிய ரீதியில் விருத்தி செய்தல்
- நிதியியல் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் பங்குரிமைச் சந்தைக்கு முதலீட்டினை ஈர்த்தல் (இலக்கு: ஐ.அ.டொலர் 300 மில்லியன்) - (செய்யப்பட வேண்டியது)
- பட்டியலிடப்பட்ட கம்பனி தொகுதிக் கடன்களுக்கு முதலீட்டினை ஈர்த்தல் - (செய்யப்பட வேண்டியது)


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# முக்கிய பிரச்சனைகள்

படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கரிசனைகள்

**நிதியியல் துறை கரிசனைகள்**

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு கரிசனைகள்


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நிதியியல் துறை தொடர்பான கரிசனைகள்:

# அரசாங்கம்

செயற்பட்டியல்

- வங்கியல்லாத் துறையின் ஒருங்கிணைப்பை வசதியளிப்பதற்கு பொருத்தமான வரி சீர்த்திருத்தங்களின் அறிமுகத்தினூடாக நிதியியல் துறையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆதரித்தல்
- நிதியியல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அரசுக்குச் சொந்தமான வங்கிகளில் சார்ந்திருப்பதை மட்டுப்படுத்தல்
- அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் அவர்களின் கடன்பாட்டு மூலங்களை பன்முகப்படுத்துவதற்கு ஊக்குவித்தல்
- அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளில் குறிப்பிட்ட நட்டங்களுக்கு அரச வங்கிகள் நிதியளிப்பதனை நிறுத்துதல்
- அரச வங்கிகளின் பெற்றோலியம் மீதான இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினைக் குறைத்தல்

# நிதியியல் துறை தொடர்பான கரிசனைகள்: மத்திய வங்கி

செயற்பட்டியல்

- சட்ட இசைவுத்தாமதத்தினை (கடனை மீளச்செலுத்தும் காலத்தினை) படிப்படியாக முடிவுறுத்துவதுடன் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய முடக்குதலினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்காக நீண்ட காலத் திட்டங்களை வெளியிடுதல்
- சட்ட இசைவுத்தாமதத்தின் தாக்கத்தினை நீடித்துநிலைத்திருக்கும் வகையில் நிதியியல் நிறுவனங்கள் கையாள்வதற்கு கணக்குகளில் ஒன்றுதிரண்டுள்ள வட்டிக்கு நிதியிடுவதற்காக ரூ.15 பில்லியன் வரையான திரவத்தன்மை ஆதரவினை வழங்குதல்
- அவசர கடன்வழங்கல் வசதிக் கட்டமைப்பினை உருவாக்குதல்
- அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை கடன் தீர்க்கப்படாத வேளையில் விற்பதையும் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களை மீள்கையகப்படுத்துவதையும் 2022.03.31 வரை இடைநிறுத்தல்
- சட்ட இசைவுத்தாமதக் காலத்தில் நிதியியல் நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட அனைத்துத் தண்டங்களையும் நீக்குதல்
- சிறந்த அளவுச் சிக்கனத்துடன் கூடிய நிதியியல் நிறுவனங்களை உருவாக்குவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்
- ஆறு முறிவடைந்த நிதிக் கம்பனிகளைக் கையாள்வதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் புதிய முதலீட்டுடன் மீட்சியடையக் கூடியவற்றினைத் தீவிரமாக மீட்சியடையச் செய்தல்
- அனைத்து நிதியியல் நிறுவனங்களும் உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னரான மீட்சிக்கான அலகுகளை உருவாக்குவதனை உறுதிப்படுத்தல்
- வங்கிகளில் பன்முகச் செலாவணி வீதங்கள் முன்னெடுக்கப்படுவதனை நிறுத்துதல்
- ஆளுகை மற்றும் உடமை விதிகளை மீளாய்வு செய்தல்


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வங்கியல்லா நிதியியல் துறையின் விரைவான ஒருங்கிணைப்பு...

- துறையில் நீண்ட காலமாகக் காணப்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் நிதியியல் துறையை ஒருங்கிணைப்பிற்கான பெருந்திட்டத்தின் சீராக்கல்
- துறைக்கு இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்துகைகளையும் புதிய முதலீடு உட்செலுத்தல்களையும் ஊக்குவித்தல்
- பெருந்திட்டத்தின் நடுத்தரகால இலக்குகளுடன் இணங்குவதற்கு 25 வலுவான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை இலக்கிடுதல்
- 2022 செத்தெம்பர் 30இற்கு முன்னர் சகல உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதை உறுதிப்படுத்தல்
- காலதாமதமற்ற ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கி ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு வசதியளித்தல்

# ஓர் அனைத்தையுமுள்ளடக்கிய திட்டத்தினூடாக தோல்வியுற்ற ஆறு நிதிக் கம்பனிகளைக் கையாள்வது...

- வர்த்தக உரிமம் இடைநிறுத்தப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் எதிர்காலத்தை ஆய்வு செய்வதற்காக ஓர் மீளாய்வுக்குட்படுத்தப்படும் - (செய்யப்பட வேண்டியது)
- இவ்வகையிலான வங்கியல்லா நிதியியல் நிறுவனம் புத்துயிரளிக்கப்படக்கூடிய சாத்தியமிருப்பதாகக் கருதினால், ஓர் சாத்தியமான வர்த்தகத் திட்டத்திற்குட்பட்டு புத்துயிரளித்தலுக்கான மூலதன முதலீட்டு உட்செலுத்தலை இயலச்செய்யும் திட்டங்களை உருவாக்கல் - (செய்யப்பட வேண்டியது)
- தொடர்புடைய செயற்றிட்டங்களின் அடிப்படையில் தேவையான இடையீடுகளை நீதிமன்ற நடவடிக்கை முறைகளில் மேற்கொள்ளல் - (செய்யப்பட வேண்டியது)
- உரிமங்கள் இடைநிறுத்தப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு சாத்தியமுடைய முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளல் - (செய்யப்பட வேண்டியது)

## “புதிய வாழ்க்கை முறையில்” வங்கிகளின் மேற்பார்வை செய்வது புதியதொரு சவாலாகவிருக்கும்...

- தளத்திற்குள்ளேயான மற்றும் தளத்திற்கு வெளியேயான கண்காணிப்புக் குழுக்களை ஒருங்கிணைத்து நெருக்கமான கண்காணிப்பு குழுக்களை கட்டமைத்தல் - (தொடரப்படுகின்றது)
- உரிமம்பெற்ற வங்கிகளின் ஐந்தொகைகள் அத்துடன் வியாபார மாதிரிகள் மற்றும் சந்தையின் கட்டமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள் மீதான நெருக்கடிகளின் நீண்டகால தாக்கத்திற்கான சாத்தியதன்மைத் தொடர்பில் முன்னோக்கிய அணுகுமுறை நடைமுறைபடுத்தல் - (செய்யப்பட வேண்டியது)
- முறையியல் ரீதியாக முக்கியமான வங்கிகளையும் மேற்பார்வை கரிசனைகளின் நெருக்கடியான நிலைமையினையும் கருத்திற்கொண்டு மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளித்தல் - (தொடரப்படுகின்றது)
- வங்கிகளின் மூத்த அதிகாரிகளுடனான கூட்டங்கள்/கலந்துரையாடல்களுக்கு தடங்கலற்ற தொடர்பாடலை இயலுமைப்படுத்துவதற்காக மெய்நிகர் தளங்களுக்கு மாற்றல் - (தொடரப்படுகின்றது)
- தரவுப்பகுப்பாய்வு மற்றும் இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வை, பணிப்பாய்வு முகாமைத்துவம் அத்துடன் நுகர்வோர் விசாரணை முகாமைத்துவம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு மேற்பார்வைத் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவிற்கான வழிமுறைகளை இனங்காணுதல் - (செய்யப்பட வேண்டியது)
- வங்கித்தொழில் துறைக்கான பேரண்டப்பொருளாதார சவால்கள் மற்றும் அதன் கசிவுத்தன்மைகளை கருத்திற்கொள்ளல் - (செய்யப்பட வேண்டியது)
- மூலதனம், திரவத்தன்மை, சட்ட இசைவுத்தாமதம் மற்றும் அறிக்கையிடல் போன்றவை தொடர்பில் நெகிழ்ச்சியான வழிமுறைகளை நடைமுறைபடுத்தலுடன் அத்தகைய தளர்வுகளை உரிய காலத்தில் நீக்குவதற்கு வசதியளித்தல் - (தொடரப்படுகின்றது)

# இலங்கையின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்தலும் அதன் நம்பகத்தன்மையை வலுப்படுத்தலும்…

- நாட்டின் பணத்தூயதாக்குதல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை இனங்காண்பதற்காக தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நிறைவுசெய்வதுடன் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு (2022-2027) நாட்டின் பணத்தூயதாக்கலுக்கு எதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான கட்டமைப்பினைத் தயாரித்தல் - (தொடரப்படுகின்றது)
- பணத்தூயதாக்குதல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வினை தணிப்பதற்காக தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் பெறுபேறுகளுக்கமைவாக தேசிய பணத்தூயதாக்கலுக்கு எதிரானதும்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிக்கக்கூடியதுமான உபாயத்தினை இற்றைப்படுத்தலுடன் இடர்நேர்வு அடிப்படையிலான பணத்தூயதாக்கலுக்கு எதிரானதும்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிக்கக்கூடியதுமான மேற்பார்வையை வலுப்படுத்தல் - (தொடரப்படுகின்றது)
- நாட்டிற்குள் முதலீட்டாளர் இசைவுச் சூழலொன்றினை விருத்தி செய்வதற்காக அனைத்து ஆர்வலர்களுக்கு மத்தியிலும் விழிப்புணர்வை அதிகரித்தல் - (தொடரப்படுகின்றது)
- நாட்டினுடைய ஒட்டுமொத்த பணத்தூயதாக்கலுக்கு எதிரானதும்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இணங்குவிப்பினை பொருத்தமான பன்னாட்டுத் தரங்களுக்கு மேம்படுத்துதல் - (தொடரப்படுகின்றது)

# கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தளத்தினை மேம்படுத்தப்படுத்தல்…

- தேசிய கொடுப்பனவுச் சம்மேளத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய இலத்திரனியல் கொடுப்பனவு வழிகாட்டல் 2022-2024 இனைப் பிரசுரித்தல்
- பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகளை ஒழுங்குப்படுத்தல்
- பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்காக வங்கியின் கொடுப்பனவு மற்றும் சந்தை உட்கட்டமைப்பு குழுவின் வழிகாட்டல்களுக்கமைவாக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமைக்காக நிதியியல்ச் சந்தை உட்கட்டமைப்பு சுய- மதிப்பீட்டு கொள்கைகளை நிறைவுசெய்தல்
- இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் எதிர்கால தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளை சீரமைத்தல்
- திறந்த வங்கித்தொழிலுக்காக ஒழுங்குமறைப்படுத்தல் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பினை உருவாக்குதல்
- தொடரேட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமைந்த உங்களது வாடிக்கையாளர்களை தெரிந்துக்கொள்ளுங்கள் கருப்பொருள் செயற்றிட்டத்தின் பெறுபேற்றினை கருத்திற்கொள்ளல்
- இலங்கையில் வங்கித்தொழிலில் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு தொடர்பான அறிக்கையினைச் சமர்ப்பித்தல்
- இலங்கையில் மத்திய வங்கி இலத்திரனியல் பணத்தினை அறிமுகப்படுத்தல் தொர்பான அறிக்கை
- இலங்கைக்காக இலத்திரனியல் வங்கித்தொழில் கட்டமைப்பினை ஆரம்பித்தல்
- தொடரேட்டு அடிப்படையிலான 'உங்களது வாடிக்கையாளர்களை தெரிந்துக்கொள்ளுங்கள செயற்றிட்டத்திலிருந்து' ஓர் இலத்திரனிணல் உங்களது வாடிக்கையாளர்களை தெரிந்துக்கொள்ளுங்கள் என்பவற்றிற்கான ஓர் பகிரக்கூடிய தீர்வினை முன்னெடுத்தல்
- பேபால் வசதியினை பெற்றுக்கொள்வதனை நோக்கி செயற்படல்

*நிதியியல் துறை கரிசனைகள்:*

# வங்கித்தொழில் துறை

**செயற்பட்டியல்**

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை கொண்ட தாங்கியிருப்புக்களை போதிய மட்டங்களில் பேணுதல்
- வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை வெளிப்படையான முறையில் மேற்கொள்ளல்
- தொழிற்பாட்டு இடர்நேர்வினை தாக்குப்பிடிக்கக்கூடிய இயலுமையை மேம்படுத்தல்
- உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்வதற்காக நுகர்வோருக்கு துணைபுரிவதற்கான மீட்சி அலகுகளை உருவாக்குதல்
- பிராந்திய விரிவுப்படுத்தலை அகலப்படுத்துவதுடன் அதிகமான கரைகடந்த வியாபாரங்களை கவர்தல்
- துறைமுக நகரத்தில் புதிய வாய்ப்புக்களை இனங்காணல்
- சட்ட இசைவுத்தாமத காலத்தின் கீழ் அல்லது செயற்படா வகைகளில் காணப்படும் வர்த்தகங்களுக்கு புத்துயிரளிக்கும் நோக்குடன் பங்குரிமைப் பங்கேற்பிற்கு அதரவளிக்கும் நிதியிடல் மாதிரிகளை கருத்திற்கொள்ளல்

*நிதியியல் துறை கரிசனைகள்:*

**பங்குச் சந்தை மற்றும் கம்பனி படுகடன் சந்தை பங்கேற்பாளர்கள்**

செயற்பட்டியல்

- துறையின் தாக்குப்பிடிக்கும் மேம்படுத்துவதற்காக பங்குகள் மற்றும் பட்டியலிடப்பட்ட படுகடன் மூலம் மூலதனத்தினை திரட்டுவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளை ஊக்குவித்தல்
- புதிய பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் சட்டவாக்கம் மூலம் முதலீடுமே வாய்ப்புக்களின் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தல்

# முக்கிய பிரச்சனைகள்

படுகடன் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கரிசனைகள்

நிதியியல் துறை கரிசனைகள்

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டு கரிசனைகள

*பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டுக் கரிசனைகள்:*

**அரசாங்கம்**

செயற்பட்டியல்

- இலகுவான இணக்கத்திற்கு அமைவான ஓர் வரி கட்டமைப்புடைய 'முதலீட்டாளர்களுக்குச் சாதகமான' வரவுசெலவுத்திட்டத்தை அறிமுகஞ்செய்தல்
- ஓர் நிலைத்திருக்கக்கூடிய முறையில் இறைப் பற்றாக்குறையை மட்டுப்படுத்தல்
- மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்து தெளிவான இலக்குகளைக் கொண்ட ஓர் நம்பகத்தன்மையுடைய நடுத்தரக்கால படுகடன் முகாமைத்துவ உபாயத்தினை வழங்கல் - (தொடரப்படுகின்றது)
- படுகடன் இருப்பின் முதிர்ச்சிக்கான சராசரி காலத்தை நீடிப்பதனை நோக்கி செயற்படுவது - (தொடரப்படுகின்றது)
- 'வர்த்தம் செய்தல்' சுட்டெண்ணில் பட்டியலிடப்பட்ட சகல காரணிகளையும் கருத்திற்கொண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான வர்த்தகச் சூழலினை மேம்படுத்தல்
- அத்தியாவசியமற்ற செலவினங்களை மட்டுப்படுத்தல்

# இலங்கையில் பௌதீக முதலீட்டு வாய்ப்புக்களுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய விபரத்திரட்டு அரசாங்கத்தினால் முடிவுறுத்தப்பட்டுள்ளது...

## நகர அபிவிருத்தி

| | |
|---|---|
| நகர்புற மத்திய நிலையம், பத்தரமுல்லை | ஐ.அ.டொலர் 75 மில் |
| துறைமுக நகரத்திற்கான உயர்தர நுழைவாயில்(சாமர்ஜ் கிரேனரிஸில் அபிவிருத்தி) | ஐ.அ.டொலர் 1.0 பில் |
| புதிய குடியிருப்புத் தொகுதி, நாரஹேன்பிட்டிய (உயர் எழுச்சியுடனான அபிவிருத்தி) | ஐ.அ.டொலர் 170 மில் |

## மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு

| | |
|---|---|
| காரைநகர் கப்பல் தளத்தின் அபிவிருத்தி | தீர்மானிக்கப்படும் |
| கடலட்டை பண்ணையின் விரிவாக்கம் - 5,000 ஏக்கர் வரை | ரூ. 500,000 (ஐ.அ.டொலர் 2,500) ஏக்கர் ஒன்றிற்கு |
| சேதன வளமாக்கி தயாரிப்பிற்கான மூலப்பொருளாக கடற்பாசியை பயிர்ச்செய்தல் | ரூ. 50 மில் |

## உண்மைச் சொத்து

| | |
|---|---|
| துறைமுக நகரம்/கொழும்பில் உயர்தர விடுதி அபிவிருத்தி | ஐ.அ.டொலர் 229.0 மில் |
| துறைமுக நகர பாரிய உயர்தர குடியிருப்பு அபிவிருத்தி | ஐ.அ.டொலர் 362.5 மில் |
| துறைமுக நகரத்திற்கு மிக அருகாமையில் கலந்த அபிவிருத்தி | ஐ.அ.டொலர் 355 மில் |
| துறைமுக நகரத்தின் மரபுசார் மத்திய நிலையம் | ஐ.அ.டொலர் 300 மில் |





## சக்தி மற்றும் வலு

| | |
|---|---|
| பூநகரியில் 100 மெகாவாட் அளவிலான காற்றாலை | ஐ.அ.டொலர் 130 மில் |
| மன்னாரில் 100 மெகா வாட் அளவிலான காற்றாலை – கட்டம் II | ஐ.அ.டொலர் 100 மில் |
| சியம்பலந்துவயில் 100 மெகா வாட் அளவிலான சூரிய மின் திட்டம் | ஐ.அ.டொலர் 100 மில் |

## மருந்தாக்கல்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டையில் மருந்தாக்கல் வலயம் | ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்கு மேல் |
| ஒயமடுவவிலும் அம்பாந்தோட்டையிலும் மருந்தாக்கல் வலயங்கள் (உள்நாட்டு முதலீட்டாளர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்) | இலங்கை ரூபாய் 28.2 பில் (ஐ.அ.டொலர் 141 மில்) |


## பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டுக் கரிசனைகள்:

## மத்திய வங்கி

### செயற்பட்டியல்

- நடு ஒற்றை இலக்கமட்ட பணவீக்கத்தினை பேணுவதனை உறுதிப்படுத்தல்
- வட்டி வீதங்களை ஒற்றை இலக்க மட்டங்களிலும் செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டினையும் நிச்சயப்படுத்தல்
- தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் மற்றும் ஏனைய நிதியியல் மோசடிகளை தடுப்பதற்கான வழிமுறைகளை தொடரல்
- படிப்படியான புறமாற்றல் வழிமுறைகள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதனால் மத்திய வங்கியின் ஐந்தொகைக்கு வலுவூட்டல்
- உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு மீளெழுந்தன்மை மீதான பணிப்புரைகளின் அறிமுகம்
- நிதியியல் நிறுவனங்களின் தளத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை வலுவூட்டல் மற்றும் ஆளுகை உள்ளடங்கலான இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை மேம்படுத்தல்
- பொதுமக்களின் விழிப்புணர்வின் தடவைகள் மற்றும் ஊடகங்களை அதிகரித்தல்
- ஓர் பசுமை நிதியிடல் வசதியொன்றினை ஆரம்பித்தல்
- பிராந்திய அபிவிருத்தி முன்னெடுப்புக்களை வலுப்படுத்தல்
- நாணய விதிச் சட்டத்திற்குக் கீழ் நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு மீதான புதிய ஒழுங்குமுறைகளை உருவாக்குதல்
- இலங்கை மத்திய வங்கியின் இணையதளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாக பாவனையாளர்களுக்கு சாதகமான முறைப்பாடு சமர்ப்பிப்பு நுழைவாயிலொன்றை அறிமுகப்படுத்தல்
- ‘கொடுகடன் ஆலோசனைவழங்கல் மையங்கள்’ மற்றும் ‘முதலீட்டு அறிவுரை மையங்களை’ பிராந்திய அலுவலகங்களில் நிறுவுதல்
- அழுத்தங்கள் கொண்ட வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கு ‘பங்குரிமை நிதிகளை’ நிறுவுவதனை வசதிப்படுத்தி இதனால் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பினை தவிர்த்தல்

# நாணயப் பக்கத்தில் முன்னுரிமைகள் 4-6 சதவீத இலக்கிடல் எல்லையினுள் பணவீக்கத்தினைப் பேணுவதனை உள்ளடக்கும்...




- அண்மைய நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகள் நடுத்தர காலத்தில் பணவீக்க அழுத்தங்கள் ஏதேனும் கட்டியெழுப்பப்படுவதனை முன்கூட்டியே தடுப்பதில் துணைபுரியும்.
- உலகளாவிய ரீதியில் கரிசனையொன்றாகவுள்ள உணவுப் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு இலக்கிடப்பட்ட வழிமுறைகள் விதந்துரைக்கப்படும்.

**தொடர்ச்சியான 150 மாத கால ஒற்றை இலக்க பணவீக்கத்தின்**


பதிவு பொருத்தமான கொள்கை வழிமுறைகளுடன் பேணப்படும்

மத்திய வங்கி 2022இன் முன்னைய காலப்பகுதியிலிருந்து அனைத்தையுமுள்ளடக்கிய

# நாணயக் கொள்கை அறிக்கை யொன்றினை

வெளியிடத் தொடங்கும்...

***இது பொறுப்புக்கூறலினையும் வெளிப்படைத் தன்மையினையும் மேம்படுத்தும்...***




***... அதேவேளையில், பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களுக்கும் எதிர்காலப் போக்கு தொடர்பிலான பெருமளவான தெளிவினை வழங்கும்!***

# நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்த உறுதிப்பாட்டினை உறுதியளிப்பதற்கு தேவைக்கேற்ப பேரண்டமுன்மதியுடைய கொள்கைக் கருவிகள் பயன்படுத்தப்படும்...








- குறிப்பாக உந்து ஊர்திகள், உண்மைச் சொத்து மற்றும் உலகளாவிய தங்க விலைகள் தொடர்பில் தளம்பலான மற்றும் அதிகரித்துச்செல்லும் விலைகளை மத்திய வங்கி அவதானித்துள்ளது
- தொடர்ச்சியான மேல்நோக்கிய விலை அழுத்தங்கள் திரண்டெழக்கூடிய தன்மை ஏதேனும் இருந்தால் மற்றும் இது உள்நாட்டு நிதியியல் முறைமையை உறுதியற்றதாக்கும் தன்மை இருந்தால் இவை கடனுக்கான பெறுமதி மற்றும் கடனுக்கான வருமான விகதங்கள் உள்ளடங்கலான பேரண்டமுன்மதியுடைய கருவிகள் மற்றும் சுழற்சிக்கெதிரான வழிமுறைகள் மூலம் முன்னெச்சரிக்கையாக தீர்க்கப்படும்
- நிதியியல் முறைமையில் ஏதேனும் முறைமைதொடர்புடைய இடர்நேர்வுகள் திரண்டெழுந்தால் இவை ஏனைய முன்மதியுடைய வழிமுறைகள் மூலம் தீர்க்கப்படும்
- மத்திய வங்கியின் பேரண்டமுன்மதியுடைய கண்காணிப்பு கட்டமைப்பு வலுபடுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன

# நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்தி தொடர்பிலான நீண்ட கால நோக்குடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதற்கான பசுமை நிதியிடல் தெரிவுகள் ஆராயப்படும்...

- பசுமையான/ நீடித்துநிலைத்திருக்கும் நிதியியல் முயற்சிகளை ஊக்குவித்தல்
- பின்வரும் துறைகளுக்கான கடன்வழங்கல் ஊக்குவிக்கும் பொருட்டு வங்கிகளுக்கு வழிகாட்டல்கள் வெளியிடப்படும்:
  - புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்றிட்டம் (சூரிய வலுச் செயற்றிட்டம், நீர்மின் வலுச் செயற்றிட்டம், காற்றாலை மின் வலுச் செயற்றிட்டம், திண்மக் கழிவு வலுச் செயற்றிட்டம் போன்றன)
  - காலநிலை தழுவல் மற்றும் தணிப்பு செயற்றிட்டங்கள் (வெள்ளக் குறைப்புச் செயற்றிட்டங்கள், கடலோரப் பாதுகாப்புச் செயற்றிட்டங்கள் போன்றன)
  - சூழலுக்கு இசைவான/ நீடித்துநிலைத்திருக்கும் வேளாண்மை (சேதன பயிர்ச்செய்கை, திறன்மிக்க வேளாண்மைத் தீர்வுகள்)
  - பொதுப் போக்குவரத்திற்காக வலுச் சேமிப்புப் பொறி/ சாதனம் மற்றும் சூழல் நேய ஊர்திகளைக் கொள்வனவு செய்தல்
  - நீர் வழங்கல்/ முகாமைத்துவச் செயற்றிட்டங்கள்
  - பசுமை கட்டடவாக்கச் செயற்றிட்டங்கள் (பசுமையான கட்டடங்கள், காலநிலை தாக்குப்பிடித்தல், கட்டவாக்கச் செயற்றிட்டங்கள் போன்றன)
  - கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டங்கள்

வங்கிகளினால் நிதியிடப்படும் புதிய பசுமையான செயற்றிட்டங்களுக்காக நியதி ஒதுக்கு விகிதத்தில் அதிகரிப்பினூடாக வங்கித்தொழில் முறைமையிலிருந்து ஈர்க்கப்பட்ட நிதியின் 1 சதவீதத்தினை விடுவிக்கும்

பல்புடை கொடையளிக்கும் முகவர்களும் 'காலநிலை நேய' பன்னாட்டு முதலீட்டாளர் சமூகமும் இலங்கையின் நீடித்துநிலைத்திருக்கும் அபிவிருத்திப் பயணத்தின் ஒருங்கிணைந்த பகுதியினராகக் கைகோர்க்க அன்புடன் வரவேற்கப்படுகின்றன

நீடித்துநிலைத்திருக்கும்/பசுமை நிதிகளின் வகைபிரித்தலின் நிறைவு பசுமைத் திட்டங்களுக்கு மேலும் உதவும்


# அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்குப் பிராந்திய அபிவிருத்தி முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்...

- "சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் முதன்முறையாக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் அமுலாக்கம்
- சமூகங்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கை நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களைப் பசுமையான கிராமங்களாக மாற்றுவதன் மூலம் சூழலுக்கு இசைவான கிராமச் சுற்றுச் சூழலொன்றை ஊக்குவிக்கும் நோக்கில் பணியாற்றுதல்
- ஆறு பிராந்திய அலுவலகங்களின் ஆதரவுடன் பிராந்திய மட்டத்தில் பிராந்திய அபிவிருத்தித் தொழிற்பாட்டினை வலுப்படுத்தல்
- சகல கேள்விப்பக்க மற்றும் நிரம்பல்பக்க சந்தை இணைப்புக்களை ஒரு தொடரிற்கு இணைப்பதற்கு வேளாண்மை அபிவிருத்திப் பெறுமதிச் சங்கிலி ஆதரவு மற்றும் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் அறிமுகப்படுத்தலும்
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மையாளர்களின் வருமான மட்டத்தினை உயர்த்துவதற்கான சலுகைக் கடன் செயற்றிட்டங்களைத் தொடர்ந்து, முறையான நிதியியல் துறை ஆதரவினை வழங்கும் அதேவேளையில், கிராமிய சமூகத்திற்கு மத்தியில் அதிகளவான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல்
- நாடளாவிய ரீதியான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நிதியிடல் விரிவாக்கம் மற்றும் நிதிக்கான அணுகலின் மேம்பாடு
- நிதியியல் கல்வியறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக நிதியியல் கல்வியறிவைத் தொடர்ந்தும் மேம்படுத்தல்
- பன்னாட்டு அமைப்புக்களுடன் உறவுமுறைகளைப் பேணுவதுடன் பன்னாட்டு அமைப்புக்களுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தல், கொடுகடன் குறைநிரப்பல் போன்றவற்றுடன் தொடர்புடைய பன்னாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளுதல்

## இணையதளங்கள் மூலமாக செயற்படுபனவை உள்ளடங்கலாக தடைசெய்யப்பட்ட/பிரமிட் திட்டங்களை மட்டுப்படுத்துவதற்குத் தேவைப்படும் வழிமுறைகளை மேற்கொள்ளளல்…

தடைசெய்யப்பட்ட திட்டங்களில் பொதுமக்கள் முதலீடுசெய்வதனை தடுப்பதற்கு 1988 இன் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் ஏனைய நிதியியல் மோசடிகள் பற்றிய முறைப்பாடுகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறியும் விசாரணைகளை மேற்கொள்ளல் - (தொடரப்படுகின்றது)
- தவறிழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்து சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அதிகாரகளிடம் அறிவிப்பது - (தொடரப்படுகின்றது)
- தடைசெய்யப்பட்ட/பிரமிட் திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தல் - (தொடரப்படுகின்றது)
  - நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் /கருத்தரங்குகள் /இணையவழி கருத்தரங்குகள்
  - அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகம் மூலம் பத்திரிக்கை அறிவித்தல்கள் மற்றும் வெளியீடுகள்
  - வானொலி மற்றும் தொலைக்காட்சி கலந்துரையாடல்கள்
  - பத்திரிக்கை கலந்துரையாடல்கள் மற்றும் கட்டுரைகள்
  - சுவரொட்டி, யூடியூப் மற்றும் ஏனைய சமூக வலைதள பிரச்சாரங்கள்
  - தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் விசாரணைகளுக்கான பதில்கள்



## மத்திய வங்கி கொடுப்பனவு முறைமையின் சீரான தொழிற்பாட்டினை வசதிப்படுத்துவதற்கு நாணயத்திற்கான கேள்வியினை திருப்திப்படுத்தும் அதேவேளையில் தற்போது நிலவுகின்ற உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக பொது மக்களிடமிருந்தான உயர்ந்த மட்டத்திலான காசுத் தேவைப்பாட்டினை நிர்வகிக்கும்...

- நாணயத் திணைக்களத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் வலுப்படுத்தல் செயற்றிட்டத்தினூடாக காசுச் சுழற்சியின் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தரத்தினை உயர்வடையச் செய்தல்
- பாவனைக்கு உதவாததும் காலம் கடந்ததுமான குத்திகளை அகற்றுவதற்கான வினைத்திறனான பொறிமுறையொன்றினை நிறுவுதல்
- அதிகளவான பார்வையாளர்களைக் கவருவதற்கு நாணய மற்றும் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையினை மேம்படுத்தல்



# மத்திய வங்கி ஆர்வலர்களை உலகளாவிய நோய்த்தொற்றினால் உந்தப்பட்ட இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் கவனமாக நெறிப்படுத்தும்...

- தொடர்ச்சியான கொடுகடன் பாய்ச்சல்களை நிச்சயப்படுத்தல்
- கடன்வழங்கல் மற்றும் வைப்புச் சாதனங்கள் இரண்டிற்குமான போட்டியானதும் நியாயமானதுமான விலையிடலைப் பேணுதல்
- கொடுக்கல்வாங்கல்களின் கண்காணிப்பினை வலுப்படுத்தல்
- முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணங்களையும் குறித்த நிதியியல் நிறுவனங்களினால் தற்போது விதிக்கப்பட்டுள்ள எதிர்கால வட்டியினையும் தள்ளுபடி செய்தல்

# நாம் “பெறுபேற்றினைச் சார்ந்தவர்களாக” இருப்போம்...

# சுருக்கமாக, நாம் இங்கு விபரிக்கப்பட்டுள்ளவாறு பல்வேறு முக்கிய வழிமுறைகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதுடன் இவ்வழிமுறைகளை ஒருங்கே நடைமுறைப்படுத்துவோம்...

- நாட்டின் வலுத் தீர்ப்பனவுகளில் நிதியிடுவதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிடுவதுடன் அதன் மூலம் திரவத்தன்மையினை உட்புகுத்தல்
- செலாவணி வீதத்தின் மீதான உத்தரவாதமொன்றுடன் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கப் பிணையங்களில் முதலீடுகளை ஊக்குவித்தல்
- ஏற்றுமதிப் பெறுகைகளின் கட்டாய மாற்றுதலினை வலுப்படுத்தல்
- வெளிநாட்டுச் செலாவணி மீளனுப்பப்படாததும் மாற்றப்படாததுமிருப்பின் ஏற்றுமதியாளர்களின் வரி இலாபங்களின் மீது 14 சதவீதமாகவன்றி 28 சதவீதமாக அறவிடுமாறு அரசாங்கத்திடம் கோருதல்
- கடன் சட்ட இசைவுத்தாமதத்தினை விரிவுபடுத்தும் வேளையிலும் பாதிக்கப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு திரவத்தன்மை ஆதரவினை வழங்குதல்
- நோயத்தொற்றினால் பாதிக்கப்பட்ட கடன்பெற்றவர்களிடமிருந்து நீதிமன்றக் கட்டளையில்லாக் கைப்பற்றல் நிறைவேற்றுகையையும் ஊர்திகளின் மீள்கையகப்படுத்தலினையும் ஆறு மாதங்களுக்கு நிறுத்துதல்
- செயற்படுத்தப்படவேண்டிய ஓர் பொறிமுறையினூடாக உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான இழப்புக்களின் சுமைகளைப் செலுத்தப்படாத வட்டி தொட்பில் ரூ.15,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதன் மூலம் இழப்புக்களை பகிர்ந்து கொள்ளல்
- நோய்த்தொற்றின் போது வழங்கப்பட்ட நாணயத்தூண்டுதலின் படிப்படியான நீக்கத்திற்கு நாணயக் கொள்கை கருவிகளை பயன்படுத்தல்
- நிதியியல் துறை பெறுபேறுகளை வழிப்படுத்துவதற்கு பேரண்ட முன்மதியுடைய கருவிகள் அதேபோன்று நுண் முன்மதியுடைய ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வையினைப் பயன்படுத்தல்
- கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றின் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல் மீது விதிக்கப்பட்டுள்ள உச்சவரம்புகளை நீக்குதல்

- 2022 சனவரியில் வெளிப்புற முதலீடு மற்றும் இடப்பெயர்வு கொடுப்பனவுகளுக்கு விதிக்கப்பட்ட உச்ச எல்லையை உயர்த்தல்
- "அத்தியாவசியமற்ற/ அவசரமற்ற இறக்குமதிகளின்" மீதான காசு எல்லை வைப்புத் தேவைப்பாடுகளை உடன் நடைமுறைக்குவரும் வகையில் நிறுத்தல்
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணிப்பதற்காக பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் முறைமையினை 2022 சனவரி 01 முதல் நிறுவுதல்
- பணிகளுடன் தொடர்பபுடைய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைக் கண்காணித்தல் மற்றும் உரிய மீளனுப்பலினையும் மாற்றுதலினையும் ஊக்குவித்தல்
- சாத்தியமான வேளைகளில் படுகடனற்ற மூலங்களினூடாகப் புதிய உட்பாய்ச்சல்களுடன் முதிர்ச்சியடையும் படுகடன் கடப்பாடுகளைப் பதிலீடு செய்தல்
- உயர் கழிவிடல்கள் பரவலாகக் காணப்படுமாயின் 2022 சனவரி மற்றும்/ அல்லது 2022 யூலையில் முதிர்ச்சியடையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முழுமையான வழங்கலை மீளக் கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்துதல்
- நாட்டிற்கான பன்னாட்டு முறிகள்/ மொ.உ.உற்பத்தி விகிதம் 10 சதவீதம் அல்லது அதற்குக் கீழ் வீழ்ச்சியடையும் வரை அரசாங்கத்திற்கும் அரசாங்க அரசாங்கத்திற்குமிடையிலான கடன்களுடன் முதிர்ச்சியடையும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைப் பதிலீடு செய்தல்
- நாட்டிற்கான தரமிடலை மேம்படுத்த வழிமுறைகளை மேற்கொள்ளல்
- அலுவல்சார் வழிகளினூடாக தொழிலாளர் பணவனுப்பல்களை வலுப்படுத்தல்
- வெளிநாட்டு நாணய பரிமாற்றுபவர்களின் உரிமங்களை மீளச்செயற்படுத்தி அலுவல்சார் வழிகளினூடாக வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளை உக்குவித்தல்

# நடைமுறைபடுத்தப்படும் வழிமுறைகள் பொதுமக்கள் தற்போது முகங்கொடுக்கும் சிரமங்களை குறைக்கச்செய்யும்...

- இவையூடாக பொதுமக்களுக்கு நேரடியான நன்மைகள் கிடைக்கும்:
  - கடன் அட்டைகள் மூலமானவை உள்ளடங்கலாக, கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்புடைய வெளிநாட்டுச் செலவாவணி பாய்ச்சல்களின் வசதிபடுத்தல்
  - 2022 சனவரியில் புலம்பெயர்வு படி மீதான தடைகளின் தளர்த்தல்
  - எரிபொருள் மற்றும் ஏனைய அவசியமான இறக்குமதிகளை வசதிபடுத்தி, இதனால் இடைவிடாத பொருட்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்தல்
  - வைப்பு வட்டி வீதங்களல் திருத்தத்தை மேற்கொண்டு சேமிப்பாளர்களுக்கான உண்மை வருவாய்களை மேம்படுத்தல்
  - நியாயமான கடன்வழங்கல் வீதங்களில் கொடுகடனின் கிடைக்குந்தன்மைக்கு ஆதரவளித்தல்
  - நிலையான விலை மட்டங்களை பேணி, ஆதலால் வாழ்க்கைச் செலவினை தளர்த்தல்
  - நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்தி, ஆதலால் பொதுமக்களின் சேமிப்புக்களை பாதுகாத்தல்

கொவிட்-19 நோய்த்தொற்றின் பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கு வர்த்தகங்கள் மற்றும் நபர்களுக்கு உதவுவதற்கு மத்திய வங்கி மற்றும் அரசினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்கு இந்த விளைவுகள் ஆதரவளிக்கும்

## நாம் 2022 மாச்சு இறுதிக் காலப்பகுதியளவில் பின்வரும் பெறுபேறுகளைப் பெறுவதனை நோக்காகக் கொண்டிருப்போம்...

- குறைந்த பட்சம் நான்கு மாத இறக்குமதியை ஈடுசெய்யும் வகையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரித்தல்
- ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க பிணையங்களில் 2.5 சதவீதத்தில் வெளிநாட்டு உடமைகளை வைத்திருத்தல் (ஐ.அ.டொலர் 1,000 மில்லியன்)
- பன்முகப்படுத்தப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் முதலீட்டாளர் தளம்
- நிலையான செலாவணி வீதமும் நிலையான வட்டி வீதங்களும்
- தேறிய வெளிநாட்டு சொத்துக்கள்/ தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் 1:5 விகிதத்துடன் உறுதியான மத்திய வங்கியின் ஐந்தொகை
- உறுதியான வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை
- ரூ.50 பில்லியன் பெறுமதிக்குக் கீழ் வாராந்த திறைசேரி உண்டியல் ஏலம்
- 2021இல் ஏறத்தாழ 5 சதவீதத்திலும் 2022இன் கா-1இல் 6.5 சதவீதத்திலும் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி
- நடு ஒற்றை இலக்கங்களில் பணவீக்கத்தினை நிலைப்படுத்தல்

# இலக்கிடப்பட்ட புதிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள்/ வெளிநாட்டுச் செலாவணி சேமிப்புக்களின் சுருக்கமான காலவரிசை – அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி

| *ஆர்வலர்* | 2021 ஒத்தோபர் – திசெம்பர் | 2021 சனவரி – மாச்சு |
|---|---|---|
| அரசாங்கம் | | |
| அரசாங்கத்திலிருந்து அரசாங்கத்திற்கான கடன்கள் | ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| பல்பக்க கடன்கள் | ஐ.அ.டொலர் 300 மில்லியன் | ஐ.அ.டொலர் 400 மில்லியன் |
| ஒருங்கிணைந்த கடன்கள் | ஐ.அ.டொலர் 300 மில்லியன் | |
| இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் முதலீடுகள் | ஐ.அ.டொலர் 250 மில்லியன் | ஐ.அ.டொலர் 750 மில்லியன் |
| புதிய இலங்கை அபிவிருத்தி முறிகள் பொதிகள் | | ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் |
| பயன்படுத்தப்படாத சொத்துக்களைப் பணமாக்கல் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| ஏனைய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (துறைமுக நகரம் நீங்கலாக) | ஐ.அ.டொலர் 300 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| மீண்டும் திரட்டக்கூடியவை | ஐ.அ.டொலர் 200 மில்லியன | ஐ.அ.டொலர் 750 மில்லியன் |
| மத்திய வங்கி | | |
| ஏனைய மத்திய வங்கிகளுடன் பரஸ்பரபரிமாற்றல் ஒழுங்குகள் | ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| உள்நாட்டுக் குறுங்கால/ நீண்ட காலப் பரஸ்பரபரிமாற்றல் ஒழுங்குகள் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| எரிபொருள்/ அத்தியாவசிய இறக்குமதிகளை வசதிப்படுத்தும் விற்பனைகள் (அண்ணளவாக) | (ஐ.அ.டொலர் 600 மில்லியன்) | (ஐ.அ.டொலர் 300 மில்லியன்) |
| பணவனுப்பல்கள்/ ஏற்றுமதிப் பெறுகைகளின் கொள்வனவுகள் | ஐ.அ.டொலர் 150 மில்லியன் | ஐ.அ.டொலர் 250 மில்லியன் |

# இலக்கிடப்பட்ட புதிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள்
## – *வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை*

| *ஆர்வலர்* | 2021 ஒத்தோபர் – திசெம்பர் | 2022 சனவரி – மாச்சு |
|---|---|---|
| வங்கித்தொழில் துறை | | |
| புதிய கொடுகடன் தொடர்கள் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் | ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் |
| வெளிநாட்டுச் செலாவணி வைப்புக்கள் | ஐ.அ.டொலர் 300 மில்லியன் | ஐ.அ.டொலர் 500 மில்லியன் |
| கொழும்பு துறைமுக நகரத்திற்கான உட்பாய்ச்சல்கள் | | ஐ.அ.டொலர் 300 மில்லியன் |
| கொழும்பு பங்குச் சந்தை | | ஐ.அ.டொலர் 200 மில்லியன் |
| வணிகப்பொருள் ஏற்றுமதியாளர்கள் | ஐ.அ.டொலர் 3,300 மில்லியன் | ஐ.அ.டொலர் 3,600 மில்லியன் |
| வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்கள் | ஐ.அ.டொலர் 1,800 மில்லியன் | ஐ.அ.டொலர் 2,000 மில்லியன் |
| பணிகள் ஏற்றுமதியாளர்கள் (சுற்றுலா நீங்கலாக) | ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் | ஐ.அ.டொலர் 1,200 மில்லியன் |
| சுற்றுலா | ஐ.அ.டொலர் 50 மில்லியன் | ஐ.அ.டொலர் 300 மில்லியன் |

# இவ்விலக்குகளை அடைவதற்கான உபாயங்கள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தில் விரும்பத்தக்க பாதையில் பொருளாதாரத்தின் உத்வேகத்தினை உந்துவதற்கான சாதனங்களாக அமையும்...

- வெற்றிகரமான தடுப்பூசியேற்றல் நடைமுறைப்படுத்தலுடன் சுகாதார வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் கீழ் நாட்டைப் படிப்படியாகத் திறத்தலானது சகல துறைகளும் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்புவதற்குத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது
- மீட்சி பரந்துபட்டதாக அமையுமென்பதுடன் பொருளாதார நடவடிக்கைகளில் வினைத்திறனாக ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சித் துறை, முறைசாரா வியாபாரங்கள் மற்றும் நாளாந்தக் கூலியீட்டுபவர்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களினையும் உள்ளடக்குமென்பதனால் எதிர்வரும் காலப்பகுதியில் பொருளாதாரத்தின் விரைவான மீட்சிக்கு வழிவகுக்கும்
- மூலதன சந்தைகளிற்கு ஏற்புடையதாகும் புதிய சட்டவாக்கத்தின் நடைமுறைப்படுத்தலுடன் முதலீட்டுக் காலநிலை படிப்படியாக மேம்படும்
- துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் போதியளவு பயன்படுத்தப்படாத சொத்துக்களின் முன்மொழியப்பட்ட நாணயமயமாக்கல் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலுடன் அதிகளவான நேரடி முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன
- சுற்றுலாக் கைத்தொழில் துறை மேம்பட ஆரம்பித்ததுடன் வெளிநாட்டுத் துறையிலுள்ள அழுத்தம் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்புவதுடன் செலாவணி வீதத்தில் பெருமளவு உறுதிப்பாடும் நடைமுறைக் கணக்கு மீதியிலும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளிலும் மேம்பாடுகளுகம் எதிர்பார்க்கப்படுகின்றன

புதிய வழிமுறைகள் உறுதியானதும் ஒழுக்கவியலுடனுமான பொருளாதாரமொன்றினை நோக்கி வழிப்படுத்தும் உறுதியான விலைகள் மற்றும் வலுவான பேரண்ட பொருளாதார அடிப்படைகளுடன் பொருளாதாரத்திற்கான பெருமளவான உறுதிப்பாட்டினைக் கொண்டுவரும்.

## அண்மைய காலத் தடைகளைச் சமாளித்துக் கொண்டு, 2022இற்கும் அதற்கு அப்பாலும் பெரும் நம்பிக்கையுடன் முன்னேற்றமடைவதனை நாம் நோக்காகக் கொண்டுள்ளோம்…

*2022 இறுதிப்பகுதியளவில் நாம் மேலும் நேர்கணிய பெறுபேறுகளை எதிர்பார்க்கின்றோம்:*

- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுவதுடன் பொருளாதார செயற்பாட்டில் இயல்புநிலையின் விளைவாக ஏறத்தாழ 6 சதவீதத்தில் உண்மையானதொரு மொத்த உள்நாட்டு வளர்ச்சி
- பணவீக்கத்தினை விரும்பத்தக்க 4-6 சதவீத இலக்கு வீச்சின் மத்தியில் நிலைப்படுத்தல்
- வட்டி வீதங்களை மேலும் நிலைப்படுத்தல்
- சுற்றுலாத்துறையின் மீளெழுச்சி சிறந்த வியாபார மனோபாவமொன்றிற்கு வழிவகுக்கும்
- உயர் முதலீட்டுப் பாய்ச்சல்கள்
- மேம்பட்ட பேரண்ட பொருளாதார அடிப்படைகளின் விளைவாக மேம்பட்ட தரமிடலின் தோற்றப்பாடு
- உறுதியானதும் ஒழுக்கவியலுடனுமான பொருளாதாரம்

இது இயக்கவாற்றல் வாய்ந்ததொரு செயற்றிட்டமாகும்...

முன்னோக்கிச் செல்லும் போது, நாம் அதில் *சிறிதளவான மாற்றங்களை, சீராக்கங்களை* ஏற்படுத்துவோம் அல்லது சில பகுதிகளை *மாற்றுவோம்...!*